பராபவ ஸூ ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2026

மலர்: 9
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்






MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM'S

# New Multi-purpose Facility

(Ground Floor)

Sri Vedantha Desikar Devasthanam's **'Kamala Thothadri Hall',** a new Multi-purpose Facility for conducting **small functions, upanyasams, music programmes,** etc., available for rent at No. 25/13, Chitrakulam South Street, Mylapore, Chennai - 600 004.








**Further details at the temple office.**

**Phone: 044-24953799,**

**044-43863747.**

ஸ்ரீ:


பராபவ ஹூ ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2026

மலர்: 9
இதழ்: 4


**ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:**
**ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:**

# தேஸிக ஸந்தேஸம்

100

நூறாவது சிறப்பு இதழ்

நூறாவது சிறப்பு இதழ்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் | ஸ்ரீ P. ஸ்ரீஹரி | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com




ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் பத்ரிகையான நம் **தேஶிக ஸந்தேஶம்** இந்த பராபவ வருடம் ஆடி மாதம் **நூறாவது இதழாக** வெளிவருவது தேசிகன் அடியார்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த மாதாந்திர பத்ரிகை மேலும் மேலும் தேசிக ஸம்ப்ரதாயத்தை பலவாறாக ப்ரசாரம் செய்யவேணுமாய் திவ்ய தம்பதிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்களின் திருவடித்தாமரைகளில் அஞ்சலி செலுத்தி வேண்டுகிறோம்.

பேரருளாளனுடைய அடியவர்கள் தம்முடைய உள்ளம் மிகவும் உத்ஸாஹமடைவதற்காக, ஸஹஸ்ரநாமம் முதலிய ஸ்துதிகளையும், அறிவதற்கு அருமையான வேதாந்தத்தின் தாத்பர்யம் இது என்னும் படி உள்ள வ்யாஸர், பராசரர் போன்ற மஹர்ஷிகளின் ஸ்ரீஸூக்திகளாகிய இதிஹாஸ, புராணங்களையும், ஆழ்வார்கள் அருளிச்செய்த சந்தமிகு தமிழ்மறைகளையும் நான்காவதான ஸ்வாத்யாய காலத்தில் சாஸ்த்ரங்களில் கூறிய முறைப்படி தாமும் அநுஸந்தித்து, சிஷ்யர்களுக்கும் ப்ரவசநமும் செய்தருள்வர் என்று ஆசார்யவள்ளல் வைஷ்ணவ தினசரியில் அருளிச்செய்கிறார்.

வேதங்கள் மிகவும் நுட்பமானவை. அவற்றை நேரடியாகப் படித்துப் புரிந்து கொள்வது கடினம். எனவே, யோக மஹிமையினால் மஹா ஜ்ஞானிகளாய் திகழ்ந்த மஹர்ஷிகள் அருளிச்செய்த இதிஹாசங்கள் மற்றும் புராணங்களில் உள்ள கதைகளின் மூலமாகவே வேதக் கருத்துக்களை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறது வஸிஷ்ட ஸ்ம்ருதி. மேலும் தொண்டர்க்கமுதுண்ண சொல் மாலைகளான ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையும் தினமும் அநுஸந்திக்க வேண்டும் என்பது ஆசார்யரின் கருத்து.

ஸ்ரீ கோதா பிராட்டியாரும் **மெள்ள எழுந்து அரியென்ன பேரரவம்** என்று காலையில் நாம் எழுந்திருக்கும் தருவாயிலும், **மாமாயன் மாதவன்** என்று நாம் துயிலும் ஸமயத்திலும் தினமும் பஞ்ச காலங்களில் நாம் செய்ய வேண்டுவதான நாம ஸங்கீர்த்தனங்களை தம்முடைய இரண்டு ப்ரபந்தங்களின் வாயிலாக இவ்வுலகத்திற்கு வெளியிட்டருளினாள்.

ஸ்ரீ ஆளவந்தாரும், ''மஹத்தான ஔதார்ய குணங்கள் நிறைந்துள்ள ஸ்ரீ பராசர மஹர்ஷி, மூவகைப்படும் தத்வ த்ரயங்கள், போகமென்னும் ஸுகாநுபவம், அபவர்க்கமென்னும் மோக்ஷம், இவைகளை ஸாதித்துக் கொடுக்கும் உபாயங்கள், இந்த உபாயங்களால் அடையபடும் கதிகள் முதலிய விஷயங்களை ஜகத்திற்குத் தெளிவாக விளக்கும் புராண ரத்னமான ஸ்ரீ விஷ்ணு புராணத்தை அருளிய ஸ்ரீ பராசர மஹர்ஷிக்கு நமஸ்காரம்'' என்று அருள்கிறார்.

கோதா பிராட்டியாரும், ஆளவந்தாரும் அவதரித்த ஆடியில் சரணாகதியைப் பற்றிய விளக்க வ்யாஸத்துடன், வழக்கமாக வரும் தொடர்கள், பல சுவையான கட்டுரைகள் இவற்றுடன் விசேஷ உத்ஸவங்களின் ப்ரதிபிம்பங்களைத் தாங்கி நூறாவது சிறப்பு இதழ் உங்கள் கைகளில்.

ஸ்ரீ:

# Truly A Century of Devotion

## FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of Maadamaamayilai Divya Dampathis and the boundless blessings of our Acharya Sarvabhouman Sri Vedantha Desika, we are delighted to present the **100th issue of the Devasthanam's monthly journal 'Desika Sandesam'** to our esteemed readers and devotees.

**A Milestone Worth Celebrating**

What began in the Chithirai month of Vilambi year (April 2018) as a humble endeavour to keep devotees connected with the festivals and divine events of our Devasthanam has, over the years, blossomed into a cherished monthly companion for our extended community. As we present this landmark issue, we pause to express our heartfelt gratitude to the Divya Dampathis and Swami Desika for their unbridled grace, and to the Editorial Board, article contributors, photographers, donors, sponsors and devotees whose steadfast support has made this journey possible. All issues published to date are available on the Devasthanam's website, www.svdd.com.

**Special Programme**

The month of Aani commenced on an inspiring note at our Devasthanam with a special discourse by the renowned Upanyaskar / speaker on Srivaishnavam, **Sri Dushyanth Sridhar,** titled **'Desikan Kodutha Super-10',** on the evening of June 15. This enlightening programme was arranged as part of the inauguration of 'Kamala Thothadri Hall', a new multi-purpose facility on the ground floor of 'Sri Nivasam', the new Archaka Quarters situated opposite the temple. Devotees who attended were richly blessed by this rare opportunity to imbibe the teachings of Swami Desika through such a distinguished orator. The novel topic pertained to Sri Desika's hymn Nyasa Dasakam, and the audience was treated to lucid and engaging commentary on the Stotra which highlights the Doctrine of Saranagati.

Aani further blessed our devotees with three significant festivals — Kodai Utsavam, Periyazhwar Satrumurai and Nathamunigal Satrumurai — besides the ever-important annual Sudarsana Homam with the participation of archakas from various Divyadesams, each conducted with due Vedic solemnity and devotion, drawing devotees in large numbers. We record our sincere appreciation to the Archakas and other Kainkaryaparas for their unstinted effort and commitment.

**Change In Trust Board**



There has been another change in the Trust Board, as **Sri R. Mugunthan** demitted office on July 3 on completion of a five-year term as a Trustee. A Chartered Accountant by profession, this was his third term in the role, and his experience was to the fore in a distinguished stint of service. He led from the front in accomplishing two historic milestone events — the Sathamana Mahotsavam (marking the 100th anniversary of the installation, in 1924, of Srinivasa Perumal and Alarmelmanga Thayar in our Devasthanam) and the Maha Samprokshanam of the temple in March this year. The offering of the 'Golden Chariot' was another highlight. The Devasthanam sincerely appreciates his commitment, vision and valuable contribution to the cause of the temple.



The Electoral Board appointed **Sri N. Kasturirangan,** a proven corporate administrator — with renowned groups of companies like TVS, ICICI and Shriram — as a Trustee in Sri Mugunthan's place. For Sri Kasturirangan, too, this will be a third term in office, following his stints in 2000-2005 and 2016-2021 with the temple. We extend our warm welcome and best wishes to Sri Kasturirangan, who assumed office on July 9, for another fruitful term at the Lord's service. The Board invokes the Divyadampathis' and Acharya Swami Desika's abundant blessings on both the incoming and outgoing Trustees.

The month of Aadi will keep the devotees divinely engaged with the temple, with festivals like Thiru Aalavandhar Thirunakshatram, Aadi-Pooram and the annual Jyeshtabhishekam.

May the divine grace of Perumal, Thayar and Swami Desika be upon us all!

## பராபவ வருட ஆடி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை / ஆகஸ்ட் | ஆடி | | | | | |
| 17.07.2026 | 1 | த்ருதீயை | வெள்ளி | மகம் | தக்ஷிணாயன புண்யகாலம். காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு | மாதப்பிறப்பு: ஸ்ரீ S. ராமஸ்வாமி. தாயார் உத்ஸவம்: ஸ்ரீ ராகவன் |
| 18.07.2026 | 2 | சதுர்த்தி / பஞ்சமி | சனி | பூரம் | ஆண்டாள் | |
| 19.07.2026 | 3 | பஞ்சமி / ஷஷ்டி | ஞாயிறு | உத்திரம் | தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு | S.V.S. ராகவன் பண்ட் |
| 20.07.2026 | 4 | ஷஷ்டி / சப்தமி | திங்கள் | ஹஸ்தம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.S. ராமாநுஜம் |
| 21.07.2026 | 5 | ஸப்தமி / அஷ்டமி | செவ்வாய் | சித்திரை | மதுரகவிகள் | |
| 22.07.2026 | 6 | அஷ்டமி / நவமி | புதன் | ஸ்வாதி | ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹன் / பெரியாழ்வார் | |
| 23.07.2026 | 7 | நவமி | வியாழன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 24.07.2026 | 8 | தசமி / ஏகாதசி | வெள்ளி | அனுஷம் | பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் யானை வாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |
| 25.07.2026 | 9 | ஏகாதசி | சனி | அனுஷம் / கேட்டை | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ ஸ்ரீராமன் குடும்பத்தினர் |
| 26.07.2026 | 10 | த்வாதசி | ஞாயிறு | கேட்டை / மூலம் | தொண்டரடிப்பொடிகள் | |
| 27.07.2026 | 11 | த்ரயோதசி | திங்கள் | மூலம் | திருமால்வடை | |
| 28.07.2026 | 12 | சதுர்தசி | செவ்வாய் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 29.07.2026 | 13 | பௌர்ணமி | புதன் | உத்திராடம் | ஆளவந்தார் திருநக்ஷத்ரம். கஜேந்த்ர மோக்ஷ உத்ஸவம். காலை பெருமாள், ஆளவந்தார் திருமஞ்ஜனம். மாலை ஸேவாகாலம், சாற்றுமுறை. பெருமாள் கருட வாஹனம், ஆளவந்தார் கேடயம் வீதிபுறப்பாடு | கஜேந்த்ர மோக்ஷம்: ஸ்ரீ M.K.R. குடும்பத்தினர். ஆளவந்தார் சாற்றுமுறை: ஸ்ரீ R. பத்ரி நாராயணன் |
| 30.07.2026 | 14 | ப்ரதமை | வியாழன் | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. சேஷாத்ரி குடும்பத்தினர் |
| 31.07.2026 | 15 | த்விதீயை | வெள்ளி | அவிட்டம் | பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் கிளி வாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம் | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ சுந்தரம் குடும்பத்தினர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01.08.2026 | 16 | த்ருதீயை | சனி | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 02.08.2026 | 17 | சதுர்த்தி | ஞாயிறு | பூரட்டாதி | திருமால்வடை | |
| 03.08.2026 | 18 | பஞ்சமி | திங்கள் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 44.08.2026 | 19 | ஷஷ்டி | செவ்வாய் | ரேவதி | திருமால்வடை | |
| 05.08.2026 | 20 | ஸப்தமி | புதன் | அச்வினி | திருவாடிப்பூர உத்ஸவம் 1-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ L.V. நரஸிம்மன் குடும்பத்தினர் |
| 06.08.2026 | 21 | அஷ்டமி | வியாழன் | பரணி | திருவாடிப்பூர உத்ஸவம் 2-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் |
| 07.08.2026 | 22 | நவமி / தசமி | வெள்ளி | க்ருத்திகை | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் கஜலக்ஷ்மி வாஹனம் உள்புறப்பாடு. ஆஸ்தானம். திருவாடிப் பூர உத்ஸவம் 3-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. சேஷாத்ரி. தாயார் உத்ஸவம்: ஸ்ரீ V. ராஜகோபாலன் குடும்பத்தினர் |
| 08.08.2026 | 23 | தசமி / ஏகாதசி | சனி | ரோஹிணி | திருவாடிப்பூர உத்ஸவம் 4-ம் நாள் - காலை ஆண்டாள் திருமஞ்ஜனம் - மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம். சாற்றுமுறை | ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன் & ஸ்ரீ S. வெங்கடரமணன் |
| 09.08.2026 | 24 | ஏகாதசி | ஞாயிறு | ம்ருகசீர்ஷம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. திருவாடிப்பூர உத்ஸவம் 5-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஏகாதசி: ஸ்ரீ மோஹன்குமார். திருவாடிப்பூர உத்ஸவம்: ஸ்ரீ C.R. ராகவன் |
| 10.08.2026 | 25 | த்வாதசி / த்ரயோதசி | திங்கள் | திருவாதிரை | திருவாடிப்பூர உத்ஸவம் 6-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி & ஸ்ரீ R. ராகவன் |
| 11.08.2026 | 26 | சதுர்தசி | செவ்வாய் | புனர்வஸு / புஷ்யம் | திருவாடிப்பூர உத்ஸவம் 7-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |
| 12.08.2026 | 27 | அமாவாசை | புதன் | புஷ்யம் / ஆயில்யம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. திருவாடிப்பூர உத்ஸவம் 8-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | அமாவாசை: ஸ்ரீ கோவிந்தராஜ பட்டர். திருவாடிப்பூர உத்ஸவம்: ஸ்ரீ வேங்கட நரஸிம்மன் குடும்பத்தினர் |
| 13.08.2026 | 28 | ப்ரதமை | வியாழன் | ஆயில்யம் / மகம் | திருவாடிப்பூர உத்ஸவம் 9-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திட்டை ஸ்ரீ ராஜகோபால் முரளி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14.08.2026 | 29 | த்விதீயை | வெள்ளி | மகம் / பூரம் | திருவாடிப்பூர உத்ஸவம். காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு. இரவு திருக்கல்யாண உத்ஸவம். ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. சேர்த்தி ஸேவை | ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி |
| 15.08.2026 | 30 | த்ருதீயை | சனி | பூரம் / உத்திரம் | ஊர்கோல உத்ஸவம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |
| 16.08.2026 | 31 | சதுர்த்தி | ஞாயிறு | உத்திரம் / ஹஸ்தம் | ஜ்யேஷ்டாபிஷேகம். பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர் 81 கலச திருமஞ்ஜனம் | ஸ்ரீ R. கோபாலஸ்வாமி ஐயங்கார் பண்ட் |
| 17.08.2026 | 32 | பஞ்சமி | திங்கள் | ஹஸ்தம் / சித்திரை | கருட பஞ்சமி. காலை கருடன் மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம் | ஸ்ரீ R. முகுந்தன் |

## வைணவ வழக்குச் சொற்கள் 23

**ஸ்ரீவத்ஸம்:** திருமால் மார்பில் உள்ள மறு

**ச்ரவணம்:** ஒரு நக்ஷத்ரம், காதினால் கேட்டல்

**ஸ்வஸ்தி வாசனம்:** ப்ரஹ்மோத்ஸவம் / திருக்கல்யாண உத்ஸவம் / ஸம்ப்ரோக்ஷணம் முடிந்தபின்பு, கொடியிறக்கி, பெருமாள் ஆஸ்தானம் எழுந்தருளிய பின், பகவானுடைய பரிஜனங்கள், திருவாபரணங்கள், மண்டபங்கள், யாகசாலை, கோசாலை முதலிய பல்வேறு சாலைகள் மற்றும் பல விஷயங்கள், பொருள்களைக் குறிப்பிட்டு அவை எல்லாம் தொடர்ந்து நன்றாக, சிறப்புடன் விளங்குமாறு அவன் அருள்புரிய வேண்டும் என்று பகவானிடம் ப்ரதான அர்ச்சகர் விண்ணப்பித்துக் கொள்வது

**ஸ்வகத ஸ்வீகாரம்:** மர்க்கட (குரங்கு) ந்யாயம் - பெருமாளின் அருளை அடைய ஜீவாத்மா தானே முன் முயற்சி எடுத்தாக வேண்டும் என்பது

ஸ்வயம் வ்யக்த: தானே வெளிப்பட்ட

**ஸ்வாபதேசம்:** உள்ளுறைப் பொருள்; Inner meaning, நுணுக்கமான உள்ளர்த்தம்

**ஸ்வாத்யாயம்:** பெருமாளைக் குறித்ததான நூல்களைப் படித்துக் கொண்டும் பிறர்க்கு எடுத்துச் சொல்லிக் கொண்டும் இருத்தல் (நாளின் பிற்பகுதியில்)

**ச்ரவணம்:** திருவோண நக்ஷத்ரம்

**ஹவிஸ்:** ஹோமம் செய்த பொருள்

**பாற்கடல்:** க்ஷீராப்தி

**அரங்கு:** உணவுக்கூடம்; Dining hall

**ஆதுரம்:** பேரார்வம்

**ஆதுரசாலை:** மருத்துவ நிலையம்

**காலாதீதம்:** காலம் கடந்தது

**கிருஷ்ணாஜினம்:** மான்தோல்

**கேழல்:** வராஹம் (பன்றி)

**கோது:** குற்றம், புளியைச் சூழ்ந்துள்ள நரம்பு

**கோளரி:** நரஸிம்ஹம்

**சதுரர்:** கெட்டிக்காரர்; Intelligent, well-versed

**சுயம்பு:** ப்ரஹ்மா

**ஸோபானம்:** படிக்கட்டு

**தண்டம் ஸமர்ப்பித்தல்:** ஒரு தடியைப் போல தரைமீது நீண்டு விழுந்து வணங்குதல்

**தன்னடிச் சோதி:** ஆசார்யன் பரமபதித்தல் (உயிர் துறத்தல்)

**திருபுட்கூடை:** மடித்துணி வைக்கும் ஓலைப் பெட்டி

**திருவந்திக் காப்பு:** காலையிலோ மாலையிலோ வீதிபுறப்பாடு ஆனவுடன் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கப்படும் ஹாரத்தி

**திருமிடற்றோசை:** பெரியோர்களின் பேச்சுக்குரல்

**பரான்னம்:** பிறர் இடும் உணவு

**பாயல்:** படுக்கை

**பூதபுரி:** ஸ்ரீபெரும்பூதூர்

**பேரருளாளன்:** காஞ்சி வரதராஜர்

**மனோஹரம்:** வெல்லப்பாகில் உருட்டிய தேன்குழல் உருண்டை

**யதி:** துறவி

**வாசாமகோசரம்:** சொல்லுக்கு எட்டாதது

**விமலர்:** குற்றமற்றவர்

**விரக்தர்:** பற்றற்றவர்

**ஸ்ரீகோசம்:** புத்தகம்

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**

**(நிறைவடைந்தது...)**

ஸ்ரீ:

# சரணாகதி வைபவம்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீவைகுண்டம் தாதாசார்யர் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

ஸ்வாமி தேசிகன் **ப்ரபந்நாத் அந்யேஷாம் ந திசதி முகுந்தோ நிஜபதம்** (பெருமாள் சரணாகதி செய்துகொண்டவனுக்கல்லது மற்றையோர்க்குத் தன் பரம பதத்தைத் தருவதில்லை) என்றும், **இன்னமுதத்தமுதால் இரங்கும் திருநாரணனே மன்னியவன் சரண்** என்றும் சரணாகதியே நமக்கு முக்ய உபாயம் என்றும், அது இல்லாவிட்டால் ஒருவன் மோக்ஷம் செல்ல வழியில்லை என்றும் ஸாதித்திருக்கிறார். இதே மாதிரி ஒவ்வொரு வைஷ்ணவ ஆசார்யர்களும் சரணாகதியைத் தவிர மோக்ஷத்துக்கு வேறு வழியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உபாய விஷயமாகப் பற்பல ஸந்தேஹங்களைப் பற்பலர் அடிக்கடி கேட்கிறார்கள்.

சரணாகதி என்னும் ஒரு சிறிய வ்யாபாரம் ஐந்து நிமிஷத்தில் முடிந்து விடுகிறது. அந்த ஐந்து நிமிஷத்திலும் கூட நமக்குப் பெருமாளிடத்தில் அந்தரங்கமான பக்தியிருப்பதாகச் சொல்லவே முடியாது. தவிர, நமது இந்த அற்பமான ஒரு கார்யத்திற்குப் ப்ரதியாகப் பகவான் அப்படிப்பட்ட மோக்ஷம் என்று சொல்லப்படும் ஒரு பெரிய பலத்தைக் கொடுக்கிறான் என்றால் அது எப்படி இருக்க முடியும்? பாபம் நிறைந்திருக்கிற நமக்குப் பெருமாள் இப்படிப்பட்ட ஒரு ஸ்தாநத்தைக் கொடுப்பாரா?

இதற்கு ஸமாதானத்தை ஒரு லௌகிக திருஷ்டாந்தத்தால் கூறுவோம். ஒரு பெரிய சக்ரவர்த்திக்கு ஒரு குமாரன் இருக்கிறான். அவன் அற்ப குணமுள்ள சில துஷ்டர்களுடன் சேர்ந்துகொண்டு பிதாவின் வார்த்தையைக் கேளாமல் நடந்துவருகிறான். அதனால் பிதாவுக்குக் கோபம் உண்டாகிறது. அவனைத் தண்டிப்பதற்காகப் பிதா அவனுடன் பேசுகிறதில்லை; அதனால் அந்தப் பிள்ளையும் பிதாவினிடம் பேசுகிறதில்லை, வெகுகாலம் இந்த மாதிரி இருவரும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்போது தகப்பனே 'ஐயோ! இந்தப் பையன் இப்படி, இருக்கிறானே! இவனுக்கு எப்போது நல்ல புத்தி வரப்போகிறது? இந்த அருமைக் குழந்தையை விட்டுப் பிரிந்து எவ்வளவு காலம் நாம் இப்படி இருப்பது?' என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால் அவனுக்கு வலுவில் அந்தப் பையனைக் கூப்பிட இஷ்டமில்லை. இருந்த போதிலும், அந்தப் பையனுக்கு வேண்டியவர்களான சில ஸுஹ்ருத்துக்கள் அந்தப் பையனைப் பார்த்து,



''அப்பா! நீ மேன்மையான சக்ரவர்த்தியின் பிள்ளை. நீ நல்ல ஸ்திதியிலிருந்து லோகம் முழுவதும் ஏக சக்ராதிபத்யம் செய்யவேண்டியவன். நீ ஏன் இப்படி அற்பர்களான துஷ்டர்களுடன் கூடிக் கெடுகிறாய்? உன் பிதாவினிடம் போய், 'நான் இனி துஷ்டர்களுடன் கூடுவதில்லை; உமது சொற்படி கேட்கிறேன்; நீர் என்னை த்வேஷிக்காமல் உம்மிடம் சேர்த்துக்கொள்ளும்; உம்மை விட்டால் எனக்கு வேறு கதி யாரிருக்கின்றனர்?' என்று சொன்னாயானால் உன் பிதா உன்னை உடனே சேர்த்துக்கொள்வர். நீ ராஜபோகத்தை அநுபவிக் கலாமே'' என்றனர். அப்போது அந்தப் பையன் உத்தரமாக ''என் பிதா என்னிடம் கோபமாக இருக்கிறாரே. நான் போய் இந்த மாதிரி சொன்னால் அவர் என்னைச் சேர்த்துக்கொள்வரா?'' என்றான்.

அப்போது அந்த ஸுஹ்ருத்; ''அப்பா! நீ ஏன் இதைப்பற்றி ஸந்தேஹப்படுகிறாய்? 'இப்படிப் பிள்ளையை விட்டு நாம் பிரிந்திருக்கிறோமே; இந்தப் பிள்ளைக்கு நல்ல புத்தி வந்து எப்போது நம்மிடம் வரப்போகிறான்?' என்றல்லவோ உன் தந்தை ஆவலுடன் இருக்கிறார்'' என்கிறார். புத்திசாலியான பையனானால் 'வாஸ்தவம்; நம்முடைய பிதா சக்ரவர்த்தி; அவருடன் சேர்ந்தால் நாமும் சக்ரவர்த்தியாக எப்போதும் ஸுகத்தை அநுபவிக்கலாம். நமக்கு அப்போது கிடைக்காத விஷயம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லையல்லவா? இந்த அற்பப் பயல்களுடன் சேர்வதால் நமக்குக் கிடைக்கிற ஸுகம் ஒன்றுமே இல்லை' என்று முதலில் யோசிக்கிறான். பின்பு கூச்சத்துடன் மெல்ல அவனிடம் அணுகுகிறான். அம்மாவினிடம் போய்ச் செய்தியைச் சொல்லுகிறான். உடனே அவன் தாய், தன் பர்த்தாவிடம் போய், ''குழக்தை வருகிறான்; அவனே அச்சப்பட்டுக்கொண்டு வருகிறன்; அவனை ஒன்றும் கடுமையாகச் சொல்லிவிடாதேயுங்கள்! நம்முடைய குழந்தை என்ன குற்றம் செய்தது? செய்தாலும் உடனே பொறுக்கவேணும் அல்லவா? அவனுக்கு நம்மை விட்டால் ரக்ஷகர் யார்? ஆலோசியுங்கள். அவனைக் கட்டாயமாக சேர்த்துக்கொள்ளவேணும்'' என்கிறாள். அவரோ தமது பத்நியின் வார்த்தையைத் தட்டமுடியாமல் அவளிடம் மோஹம் கொண்டவராக இருக்கிறார். உடனே தாயார் அந்தப் பையனைத் தகப்பனிடம் கூட்டிக்கொண்டு போய்க் குழந்தையைப் பார்த்து, ''அப்பாவை ஸேவி'' என்கிறாள். பையனும் அப்பாவினிடம் போய் ''அப்பா! நீர் இப்படிப் பேசாமலிருந்தால் வேறு எனக்குக் கதி யார் சொல்லும்'' என்று ஸேவிக்கிறான். உடனே அவன் பிதா நல்ல உத்தம புருஷனானபடியாலும், நல்ல தயவான் ஆனபடியாலும், இந்த வார்த்தையைக் கேட்டுத் தாங்கமாட்டாமல் உடனே தன் குழந்தையைக் கட்டி அணைத்துக்கொண்டு அங்கீகாரம் செய்துகொள்ளுகிறான். இப்படி அங்கீகாரம் செய்து அந்தப் பையனைச் சேர்துக்கொள்ளாமல், அரசன் தான் மட்டும் தனித்து ராஜ்ய பரிபாலனம் செய்தால் அதில் அவனுக்கு என்ன ஸுகம் ஏற்படும்? தன் குழந்தைகள் ஸஹிதமாக ராஜ்ய பரிபாலனம் செய்து ஏக குடும்பமாக அநுபவித்தால் தானே அவனுக்கு ஸுகம்? ஆகையால், 'இப்படிப் பிரிந்தோமே' என்று கவலையுடன் இருந்த தகப்பனார், பையன் வந்து விட்டான்; இனித்தான் நமக்கு ராஜ்யானுபவ ஸுகம் ஏற்படும்' என்று ஸந்தோஷத்துடன் அங்கீகாரம் செய்கிறார்.

இந்த மாதிரி, ராஜாவினுடைய சொல்லைத் தட்டி நடந்த வேறு யாருடைய குற்றத்தை அரசன் இப்படி ஒரு வார்த்தை சொன்னதற்காகப் பொறுப்பன்? பிள்ளையாக இருந்தாலும் கூட இவ்வளவு தூரம் கெட்டவர்களுடன் சேர்ந்தவனாக இருந்தவனை இத்தனை நாள் பொறுக்காமல் கோபத்துடன் இருந்து வந்து, அவனுடைய முகத்தில் விழிக்கவும் கூடாது என்று இருந்த பிதாவினிடம் போவதற்குக் கூச்சப்பட்டுக் கொண்டிருந்த பையனை அவரிடம் கொண்டுபோய் அந்தத் தாயும் இவ்வளவு தூரம் சிபார்சு செய்யாவிட்டால் அந்தத் தகப்பனிடம் இவன் தான் போவானா? தகப்பன் தான் இவனைத் தன்னிடம் வர இடம் கொடுப்பானா? இல்லையே! தாயின் மோஹத்தில் அகப்பட்டு அவள் வார்த்தையைத் தட்டமுடியாமல் அல்லவோ அரசன் க்ஷமித்தது? இப்படிப்பட்ட சிபார்சு இல்லாவிட்டால் பிதா இவனிடம் முகம் கொடுத்திருக்க மாட்டாரல்லவா? தவிரவும், தகப்பனிடத்தில் ஏராளமான இரக்கம் இருந்ததினால் அன்றோ இப்படிப் பிள்ளை சொன்ன வார்த்தையைக் கேட்டுத் தாங்கமாட்டாமல், தகப்பன், பிள்ளையின் குற்றத்தை எல்லாம் மறந்தது. அவன் இரக்கமற்ற மனமுடையவனாயிருந்தாலும், பெருந்தன்மை இல்லாதவனாக இருந்தாலும், இந்தப் பிள்ளையைத் தகப்பன் இந்த ஸேவைக்காகச் சேர்த்துக்கொள்ளவே மாட்டான். தகப்பனிடமுள்ள தயை, பெருந்தன்மை முதலிய குணங்களல்லவா இந்தக் கார்யத்தைச் செய்தன?

இந்த மாதிரி, பின்னையைத் தகப்பன் சேர்த்துக் கொண்டதற்குக் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால், தாயின் சிபார்சு, பிள்ளை என்கிற பந்துத்வம், தகப்பனிடம் இயற்கையாயுள்ள தயை முதலிய குணங்கள், தகப்பனுக்கே உள்ள ஸுகாநுபவம் முதலிய குணங்களன்றோ?

இதேமாதிரி பகவான் நமக்குப் பிதா. **பிது: ப்ரேஷ்யஸ்ததா சிஷ்யித்யேவம் ச நிவேத்யேத்** என்பது வசனம். அவன் பேச்சைக் கேட்டு நடக்காததனால் நம்மிடம் அவன் கோபத்துடன் இருக்கிறான். **ச்ருதிஸ்ம்ருதிர் மமைவாக்ஞா யஸ்தாம் உல்லங்க்ய வர்த்தே, ஆஜ்ஞாச்சேதி மமத்ரோஹி** (ச்ருதியும் ஸ்ம்ருதியும் என்னுடைய

கட்டளை; எவன் அவற்றை மீறி நடக்கிறானோ அவன் எனக்குச் சத்ரு) என்று பெருமாள் சொல்லுகிறார். நாமோ ப்ரதிதினமும் ஈச்வரன் கட்டளையை மீறி நடக்கிறவர்களே தவிர, அவன் கட்டளையை அநுஸரித்து நடக்கின்றவர்களல்லர்.

**வதம்யேத் பாஞ்சகாலிக வர்த்மநா** என்று ஒவ்வொரு தினத்தையும் ஐந்து பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திலும் இன்னின்ன கார்யம் தான் செய்யவேணுமென்று கடவுள் கட்டளை இட்டிருக்கிறார். ச்ருதி ஸ்ம்ருதிகளில் விதித்தபடி தவறாமல் நடக்கிறவர் யார் இருக்கின்றனர்? நம் பூர்வாசார்யர்கள் **நதர்ம நிஷ்டோஸ்மி** என்றும் **அஹமஸ்யபராதாநாமாலய:** என்றும் **அஹமஸ்ம்யபராத சக்ரவர்த்தி** என்றும் பலபடிகளிலும் தங்களுடைய பாபத்தை நினைத்து வருந்தியிருக்கிறார்கள். நாம் எந்த மூலை? ஒவ்வொரு நிமிஷமும் நாம் மஹத்தான அபராதங்களைச் செய்கிறவர்கள் ஆனதால் ஈச்வரன் நம்மிடம் மிகுந்த கோபத்துடன் நம்மை வெறுக்கிறான். இவ்விதமாக, நம்முடைய பிதாவான ஸர்வேச்வரனைவிட்டு, அற்பர்களான மனுஷ்யர்களையும் அற்ப பலனைக் கொடுக்கக்கூடிய சில்லறைத் தேவதைகளையும் கிட்டி அவர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களுக்கு அநுகூலமான கார்யத்தைச் செய்து வருகிறோம். அப்போது நமக்கு வேண்டியவர்களான சிலர் வருகிறர்கள். அவர்கள் தான் ஆசார்யர்கள். அவர்கள் நமக்கு இவ்வாறு புத்தி சொல்லுகிறார்கள். ''அப்பா நீ பெருமாளுடைய பிள்ளை, அவன் அனுபவிக்கிற ஸுகமெல்லாம் நீயும் அனுபவிக்க வேண்டியவன். நீ ஏன் இந்த மாதிரி கெட்ட மார்க்கத்தில் அற்பர்களுடன் சேர்ந்து உன் பிதாவின் கோபத்திற்குள்ளாகிறாய்? உன் பிதாவான பெருமாளிடம் போய் 'நான் இனி அற்ப மனுஷ்யர்களுடனும் தேவதாந்தரங்களுடனும் சேர்கிறதில்லை. உம்முடைய சொல்லையே கேட்கிறேன்; நீர் உம்மிடம் சேர்த்துக்கொள்ளும். உம்மை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கின்றனார்' என்று சொல்லு. அப்போது ஈச்வரன் உன்னைச் சேர்த்துக்கொள்வான். நீ மோக்ஷத்தில் போய் பெரிய ஸுகத்தை அனுபவிக்கலாம்'' என்கிறார். அதற்கு அப்பையன் ''நான் ரொம்ப அபராதி ஆச்சுதே; பெருமாள் என்னிடம் ரோம்ப கோபமாக இருக்கிறாரே! நான் பொய் சொல்லுகிறவன், குடிக்கிறவன், பரஸ்த்ரீ கமநம் செய்பவன், கேவலமான கார்யங்கள் செய்கிறவன்; இப்படிப்பட்ட மஹாபாபிக்கும் பெருமாள் இரங்குவாரா?' என்று கேட்டால் அங்கு நல்லவரான ஆசார்யன் சொல்லுகிறார்: **''சரணம் ச ப்ரபந்நானாம் தாவாஸ்மீதிச யாசதாம், ப்ரஸாதம் பித்ரு ஹந்த்ரூணாமபி குர்வந்தி ஸாதவ:** என்று தகப்பனை கொலை செய்கிறவனாக இருந்தாலும் 'நான் உன்னைச் சேர்ந்தவன்' என்று சரணமடைந்தால் அவர்களுக்கு ஸாதுக்கள் தயை செய்கிறார்கள்.

**''யேந்ருசம்ஸா துராத்மந: பாபாசாரரதாஸ்ஸத, தெபியாந்தி பரம் ஸ்தானம் நராநாரயணாச்ரிதா:** என்று மஹா கெட்டவர்களாக இருந்தாலும், பாபம் செய்வதிலேயே ஆசையுள்ளவர்ளாக இருந்தாலும், சரணாகதி பண்ணினவர்கள் பரமபதத்தை அடைகிறர்கள். பொறுக்க முடியாத குற்றங்களையும்கூட, ஒரு பெருந்தன்மையுடைய மநுஷ்யன் காலில் விழுந்து என்னை மன்னிக்க வேணுமென்றால் அவன் கட்டாயம் மன்னிக்கிறான் என்பது லோகத்தில் அநுபவ சித்தம்'' என்றிப்படி ஆசார்யன் இவனுக்குத் தேறுதல் சொல்லிப் பெருமாளிடம் போய்ச் சரணாகதி செய்தால் அவர் உன்னைச் சேர்த்துக் கொள்வார் என்று சொல்லுகிறான்.

## சில ஆழ்வார்கள், ஆசார்யர்களின் வேறு பெயர்கள்

**நம்மாழ்வார்:** பராங்குசர், வகுளாபரணர், சடகோபன், மாறன், மகிழ்மாறன், சடாரி, திருக்குருகூர் நம்பி

**பேயாழ்வார்:** தமிழ்த் தலைவன், மஹதாஹ்வயர்

**திருமழிசையாழ்வார்:** பக்திஸாரர், உறையிலிடாதவர்

**குலசேகராழ்வார்:** கொல்லி காவலன், கோழியர் கோன்

**பெரியாழ்வார்:** விஷ்ணு சித்தர், பட்டர் பிரான்

**ஆண்டாள்:** கோதை, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, நாச்சியார்

**தொண்டரடிப்பொடியாழ்வார்:** விப்ர நாராயணர்

**திருப்பாணாழ்வார்:** முனிவாஹனர், பாண்பெருமாள்

**திருமங்கையாழ்வார்:** கலியன், பரகாலன், நாலுகவிப் பெருமாள், கலிகன்றி, குறையல் பிரான், நீலன், ஆலி நாடன், அடையார் சீயம்

**பெரிய நம்பி:** மஹாபூர்ணர்

**ஆளவந்தார்:** யமுனைத்துறைவர், யாமுனாசார்யர், யாமுனர், பெரியமுதலியார்

**ராமானுஜர்:** இளையாழ்வார், உடையவர், எம்பெருமானார், கோயிலண்ணன், யதிராஜர், பாஷ்யகாரர், திருப்பாவை ஜீயர், தேசிகேந்திரன், சடகோபன் பொன்னடி, லக்ஷ்மண முனி, பரதபுரீசர்

**கூரத்தாழ்வான்:** கூரேசர், திருமறுமார்பன், ஸ்ரீ வத்ஸாங்கர்

**வேதாந்த தேசிகன்:** தூப்புல் மாமணி; ஸர்வதந்தர ஸ்வதந்த்ரர், வேங்கட நாதன், கவிதார்க்கிக கேஸரீ

ஸ்ரீ:

# தீர்த்தங்கள்

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

**முன்னுரை**

தலைப்பைக் கண்டு அடியேன் புனிதநதிகள், புனிதகுளங்கள் ஆகியவற்றைப் பற்றி எழுதப்போவதாக எண்ண வேண்டாம். தீர்த்தம் என்ற வடசொல்லுக்குப் பல பொருட்கள் உண்டு. **த்ரு** என்கிற தாதுவிலிருந்து உண்டான இச்சொல் பாபத்திலிருந்து தாண்டவைப்பது என்ற பொருளை உடையது. தூய்மையற்றவற்றைத் தூய்மையாக்கவல்ல பாவனமான பொருள் தீர்த்தம் எனப்படுகின்றது. அதனால் தான் பகவான், ஆசார்யர்கள், புனிதஸ்தலங்கள், புனிதநீர், சாஸ்த்ரம் முதலிய பல பொருட்களை இச்சொல் குறிக்கும்படிப் பயனபடுத்தப்படுகின்றது. இக்கட்டுரைத் தலைப்பில் இச்சொல் எம்பெருமான், ஆண்டாள் மற்றும் ஆளவந்தாரைக் குறிக்கின்றது.

**ஆழ்வாரின் சொல்லாட்சி**

ஆழ்வார் **தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்** என்ற பாசுரத்தில் இச்சொல்லால் எம்பெருமானைக் கூறினார். ஆழ்வாரின் **தயரதன் பெற்ற மரகதமணித்தடம்** முதலிய சொல்லாட்சியையும் மனதில் கொள்க. **தீர்த்தனுகற்றபின்** என்ற பாசுரத்தில் முதலடி மற்றும் இரண்டாம் அடியில் இச்சொல்லால் எம்பெருமானையும், மூன்றாம் அடியில் இச்சொல்லால் திருவாய்மொழியின் அனைத்து பாசுரங்களையும், அத்தகைய புனிதமான திருவாய்மொழியில் **இன்பம்பயக்க** என்னும் தசகத்தை அப்யஸித்து ஓதவல்லார்களை நான்காம் அடியிலும் தீர்த்தம் என்ற சொல்லால் கூறியுள்ளது இவ்விடத்து குறித்துக்கொள்ளத்தக்கது. எம்பெருமானைப் போலவே மற்றவற்றை – மற்றவர்களைப் புனிதமாக்கும் தன்மையுள்ளவற்றையும், தன்மையுள்ளவர்களையும் இச்சொல்லால் கூறலாம் என்பதை ஆழ்வார் இப்பாசுரத்தால் காட்டினார். நம் ஸனாதன தர்மத்தின் சில ஸம்ப்ரதாயங்களில் ஆசார்யர்களை இச்சொல்லால் குறிப்பிடுவதை நாம் காண்கின்றோம். இக்கட்டுரையிலும் ஆளவந்தாரைத் தீர்த்தமாக ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்ததைக் காணவிருக்கின்றோம்.



**பண்பில் ஒற்றுமை**

தீர்த்தம் (நீர்நிலைகள்) நம்மை தூய்மைப்படுத்த வல்லவை; தாபத்தை, அதிலும் கோடைகாலத்தில் தாபத்தைப் போக்கவல்லவை; புத்துணர்ச்சி அளிக்க வல்லவை. எம்பெருமானும் ஆசார்யர்களும் நம்மைத் தூம்மைப்படுத்துபவர்கள்; ஸம்ஸாரதாபத்தைப் போக்கடிப்பவர்கள்; இருள்தருமா ஞாலத்திலும் பகவதனுபவத்தால் புத்துணர்ச்சி அளிப்பவர்கள். இவர்களுடைய திவ்ய சரிதமும், திருமேனியும், ஸ்ரீஸூக்திகளும் கூட இத்தன்மைகள் பெற்றவையே ஆகும்.

இனி தீர்த்தனான எம்பெருமானையும், திருவாடிப் பூரத்தில் அவதரித்த சூடிக்கொடுத்தாளையும் அவ்வாறே திருவாடியில் உத்ராஷாடா நக்ஷத்ரத்தில் அவதரித்த ஸ்ரீஆளவந்தார் என்னும் யமுனைத் துறைவரையும் ஸ்வாமி நிகமாந்த தேசிகனார் தீர்த்தமாக அருளிச்செய்த ச்லோகங்களின் பொருட்களைச் சுருக்கமாகக் காண்போம்.

**எம்பெருமான் என்னும் தீர்த்தம்**

ஆழ்வார்களைப் போலே ஆசார்யர்களில் நாயிகா பாவத்தில் எம்பெருமானை அனுபவித்தவர் ஸ்வாமி தேசிகனே ஆவார். அவர் மும்மணிக் கோவையில் வெளிப்படையாக நாயிகா பாவத்தில் தெய்வநாயகனை அனுபவித்தது மட்டுமின்றி குறிப்பால் நாயிகா பாவத்தை ஏறிட்டுக் கொண்டிருந்ததைத் **தேவநாயக பஞ்சாசத்** என்னும் ஸ்ரீஸூக்தியில் பலவிடங்களில் காணமுடிகிறது. அவற்றில் ஒரு ச்லோகம்:

*வ்யாமோஹிதா விவிதபோகமரீசிகாபி:*
*விஶ்ராந்திமத்ய லபதே விபுதைகநாத!।*
*கம்பீரபூர்ணமதுரம் மம தீபவந்தம்*
*க்ரீஷ்மே தடாகமிவ ஶீதமனுப்ரவிஷ்டா॥*

என்பதாகும். ''தேவர்களின் ஒப்பற்ற தலைவனே! பலவகைப்பட்ட இன்பம் என்னும் கானல் நீரால் (கானலாற்றால்) மயக்கப்பட்ட அடியேனின் அறிவானது (அறிவென்னும் பெண்) இனிய ஆழமான நிறைந்த குளிர்ந்த பண்புகளைப் பெற்றுள்ள தேவரீரிடத்தில் கோடைக்காலத்தில் பொய்கையில் குடைந்து நீராடி தற்போது களைப்பாறுதலை அடைகின்றது (அடைகின்றாள்) என்பது இதன் பொருளாகும். இனி ஆண்டாளை தீர்த்தமாக வர்ணித்ததைக் காணலாம்.

**ஸ்ரீஆண்டாள் என்னும் தீர்த்தம்**

ஸ்ரீஆண்டாளைப் பற்றிய ஸ்தோத்ரங்களில் இதற்கு இணை கிடையாது என்னும்படி அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீகோதாஸ்துதியில்

*ரங்கே தடித்குணவதோ ரமயைவ கோதே!*
*க்ருஷ்ணாம்புதஸ்ய கடிதாம் க்ருபயா ஸுவ்ருஷ்ட்யா।*
தௌர்கத்யதுர்விஷவினாச ஸுதாநதீம் த்வாம்
ஸந்த: ப்ரபத்ய சமயந்த்யசிரேண தாபாந்॥



கோதையே! திருவரங்கத்தாயார் மின்னல் கொடி; அவள் அரங்கன் என்னும் கருமேகத்தில் இருக்கின்றாள். அக்கருமுகிலின் அருள் என்னும் நன்மாரி பொழிந்து ஒரு அமுதநதி பெருக்கெடுத்து ஓடுகின்றது. அது ஸம்ஸாரம் என்னும் கொடிய விஷத்தை முறிக்கும் ஆற்றல் கொண்டதாகும். **அவ்வமுதநதி யாதெனில் ஆண்டாளான நீதான்.** இந்நதியில் ஸாதுக்கள் குடைந்தாடி உடனே தங்களுடைய ஸாம்ஸாரிக தாபங்களை எல்லாம் போக்கிக் கொள்கின்றனர் என்பது இதன் பொருளாகும். இதனால் ஸ்வாமி தேசிகன் ஆண்டாளையே தீர்த்தம் என அருளிச்செய்துள்ளதைக் காணலாம். மற்றும் இத்துதியிலேயே கோதாவரி நதியானது கோதா என்ற ஆண்டாளின் பெயரைத் தாங்கியிருப்பதால் உலகத்தைத் தன் நீரால் புனிதமாக்குகின்றது போலும் என்றதும் கருத்தில் கொள்ளத்தக்கது. இனி ஸ்ரீஆளவந்தாரைத் தீர்த்தமாக அருளிச்செய்ததைக் காணலாம்.

**யமுனைத்துறைவர் என்னும் தீர்த்தம்**

ஸ்ரீயதிராஜஸப்ததி என்னும் உயரிய காவியத்தில் எம்பெருமானாரைத் துதிக்கும்முன் அவருடைய (நம்முடைய) ஆசார்யபரம்பரையைத் துதிக்கும் காலத்து ஸ்வாமி தேசிகன்,

*விகாஹே யாமுனம் தீர்த்தம் ஸாதுப்ருந்தாவனே ஸ்திதம்।*
*நிரஸ்தஜிம்மகஸ்பர்சே யத்ர க்ருஷ்ண: க்ருதாதர:॥*

என அழகியதாய் இரட்டுறமொழிதலால் ஒரு ச்லோகம் அருளிச்செய்துள்ளார். இதில் யமுனா தீர்த்தத்தையும் ஆளவந்தாரையும் ஒருங்கே புகழும்படி ச்லோகத்தை அமைத்துள்ளார்.

யமுனைநதி போக்கடிக்கப்பட்ட காளியன் என்னும் பாம்பின் தொடர்பை உடையது. யாமுனர் நம்முடைய ராகத்வேஷாதிகளாம் பாம்புக் கூட்டத்தின் தொடர்பை அறுப்பவர். ஆழ்வார் **தீவினையாம் பாம்பார்வாய்க் கைநீட்டல் பார்த்தி** என்று அருளிச்செய்து இங்கே அனுஸந்திக்கத்தக்கது. சோழவரசனால் கொடுக்கப்பட்ட பாதி அரசை – ஐச்வர்யத்தை பாம்பாக எண்ணித் துறந்து துறவுபூண்டு எட்டு க்ரந்தங்களை நமக்கு அளித்து எட்டவொண்ணாத இடம் தந்த வள்ளல் அல்லவா நம்மை ஆளவந்த யாமுனர்! காளியன் போன்ற பாஹ்ய குத்ருஷ்டிகளை விரட்டியடித்தவர் அல்லவா ஆளவந்தார்! பாஞ்சராத்ரத்தை தூஷித்த மீமாம்ஸகர்களையும், சில இடங்களில் பாஞ்சராத்ரம் சான்றாகும் (முழுதும் சான்றாகாது) என்ற அத்வைதிகளையும் ஆகம ப்ராமாண்யம் என்ற ஸ்ரீஸூக்தியால் விரட்டியடித்தவர் அல்லவா ஆளவந்தார்! பாஞ்சராத்ரம் கோவில்களை மட்டுமின்றி ப்ரபத்தியையும் காக்கும் உயரிய



நூலாதலால் இதை யாமுனர் காக்காமல் விட்டிருந்தால் ப்ரபத்தி மார்க்கம் புல்மண்டிக் கிடக்கும்; அந்நிலையைத் தவிர்த்த மாஹானுபாவர் ஆளவந்தாரே ஆவார்.

கண்ணன் யமுனை நதியில் ஆதரம் மிக்கவன்; ஆளவந்தாரிடத்திலும் கண்ணன் ஆதரம் மிக்கவன். ஸ்ரீநாதமுனிகள், ஸ்ரீஈச்வர பட்டாழ்வான் ஆகியோர் ஆராதித்த கண்ணன் ஆளவந்தாரால் ஆராதிக்கப்பட்டு அவர் காலத்துக்குப் பின் பெரிய திருமலைநம்பியிடம் எழுந்தருளினான் முதலிய சரிதம் இங்கு ஸ்வாமியால் குறிப்பிடப்படுள்ளது. இதன் விரிவை திருவாய்மொழி உரைகளில் காணலாம்.

மிகவும் ஸாதுக்களான ஆயர்கள் நிறந்த ப்ருந்தாவனத்தில் இருக்கிறது (ஓடுகின்றது) யமுனை. ஸாதுக்களின் ப்ருந்தத்தை (கூட்டத்தைக்) காக்க உறுதியுடன் எழுந்தருளியிந்தவர் ஆளவந்தார். இவ்வளவால் யமுனா தீர்த்தத்துக்கும், யாமுனர் என்ற தீர்த்தத்துக்கும் (ஆசார்யருக்கும்) ஒற்றுமைகளைக் காட்டிய தீர்த்தரான ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில்,

*நீளவந்தின்று விதிவகையால் நினைவொன்றிய நாம்*
*மீளவந்தின்னும் வினையுடம்பொன்றி விழுந்துழலாது*
*ஆளவந்தாரெனவென்றருள்தந்து விளங்கிய சீர்*
*ஆளவந்தாரடியோம் படியோம் இனி அல்வழக்கே.*

என்றருளிச்செய்தார். மேற்படி ஸ்ரீயதிராஜஸப்ததி ச்லோகத்தைத் திருவுள்ளத்தில் கொண்டு இப்பாசுரத்தில் படியோம் என்ற வினைச் சொல்லை ஸ்வாமி தேசிகன் பயன்படுத்தியுள்ளதை ரஸிக்கவேண்டும். ஸ்ரீஆளவந்தாரின் தாஸர்களான நாங்கள் அல்வழக்கு நூல்களைப் படிக்கமாட்டோம் என்று ஒரு பொருள் ஆகும். மற்றொரு பொருள் ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளில் நீராடிய நாங்கள் உடலே ஆத்மா முதலிய அல்லவழக்குகளில் படியோம் (மூழ்க மாட்டோம்) என்பதாகும்.

**முடிவுரை**

*ஸாதூணாம் தர்சனம் புண்யம் தீர்த்தபூதா ஹி ஸாதவ: ।*
*காலேன பலதம் தீர்த்தம் ஸத்ய: ஸாது ஸமாகம: ॥*

என வடமொழியில் ஒரு வழக்குண்டு. ஸாதுக்களைக் காணுதல் புண்யமாகும். அவர்கள் தீர்த்த பூதர்கள் அல்லவோ! பிற்காலத்திலேயே புனித நதிகளில் நீராட்டம் முதலியவை பயனளிக்க வல்லவை; ஸாதுக்களின் உறவோ உடன் பலனளிக்க வல்லதாகும் என்பது இதன் பொருளாகும். பொதுவாக ஸாதுக்களுக்கே இத்தகைய மேன்மையுண்டு என்றால் ஆண்டாள் மற்றும் ஆளவந்தார் ஆகியவர்களின் திருவடி ஸம்பந்தம் பெற்று, அவர்களின் திருமேனிகளை ஸேவித்து, அவர்களுடைய திவ்ய ஸூக்திகளில் தினந்தோறும் நீராட்டம் காண்பாரின் பெருமை, தம் தேவியர்க்கு தேவர் (நித்யஸூரிகள்) வைகல் தீர்த்தங்களே என்று பூசித்து நல்கியுரைக்கக் கடவதல்லவா?

## ஆடியில் முக்கிய உத்ஸவங்கள்

**கஜேந்த்ர மோக்ஷம் – ஆளவந்தார் திருநக்ஷத்ரம்**
ஜூலை 29 (புதன்)

**திருவாடிப்பூர உத்ஸவம் (10 நாட்கள்)**
ஆகஸ்ட் 5 (புதன்) முதல் 14 (வெள்ளி) வரை

**திருவாடிப்பூரம் – ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவம்**
ஆகஸ்ட் 14 (வெள்ளி)

**ஊர்கோல உத்ஸவம்**
ஆகஸ்ட் 15 (சனி)

**ஜ்யேஷ்டாபிஷேகம்**
ஆகஸ்ட் 16 (ஞாயிறு)

**கருட பஞ்சமி**
ஆகஸ்ட் 17 (திங்கள்)

# சிறுச்சிறிதே

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

பாடவல்ல பாவையாம் ஸ்ரீஆண்டாள் தாம் அருளிச்செய்த திருப்பாவையில் எம்பெருமானைப் பள்ளியுணர்த்துவதற்காகத் திருப்பள்ளியெழுச்சியும் பாடியுள்ளாள்! விடிந்தும் விடியாத ஒரு காலைப் பொழுதில் நந்தகோபன் திருமாளிகைக்குத் தம் தோழிகளுடன் வந்தவள் அங்கே கண்வளரும் கண்ணனை எழுப்புகிறாள். கண்ணன் உறங்கும் பள்ளிக்கட்டிற் கீழே வந்து நின்று **அங்கண் மாஞாலத்தரசர்** என்று தொடங்கிப்பாடுகிறாள். திருக்கண்களை மூடியவண்ணம் சயனித்திருக்கும் இவன் தம் கண்களை எங்ஙனம் திறக்க வேண்டுமென்பதை கவி நயத்துடன் மிக அழகாகப் பாடுவது அனுபவித்து மகிழ வேண்டிய ஒன்றாகும்.

**அத்யாபயந்தீ** என்று தனியனில் ஸ்ரீ பராசர பட்டர் அருளிச்செய்த வண்ணம் இவள் கண்ணனுக்குக் கண்விழிக்கவுமல்லவோ கற்றுத்தருகிறாள்! **கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப்பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ** என்று பாடுகிறாள்.

**உறங்குவான் போல் யோகு செய்யும் பிரானாகிய** இவன் உறங்குவதும் உண்டோ? திருக்கண்களை மூடியவண்ணம் படுத்துக் கிடக்கிறானே! இதுவும் மாயனான இவ்வாயனது மாயமோ! ஆயர் சிறுமிகளை எழுப்ப ஆதவனின் வருகையைச் சொல்லிப் பாடிய இவள் இத்தாமரைக் கண்கள் மலர்வதற்கும் அவ்வாதவனின் ஒளி தேவையோ என எண்ணுகிறாள். இல்லை, இல்லை! இது நிலவைக்கண்டு மலரும் தாமரையாயிற்றே! மதிமுக மடந்தையாம் பெரிய பிராட்டியாரின் நிலவொளியில் மலரக்கூடிய தாமரையிது என்பதை இவளும் அறிவாள்! தாம் வந்திருப்பது தெரிந்தும் கள்ள நித்திரை கொள்ளும் இவனை நாம் கட்டிலருகே வந்து அழைக்க வேண்டும் என்னும் இவனுடைய திருவுள்ளத்தை அறிந்துகொண்டாள்! ஒரு த்ருஷ்டாந்தமும் கொடுத்து இவ்விடத்தில் அவனைப் பள்ளியுணர்த்துவது (எழுப்புவது) மிக அழகு.

உள்ளிருக்கும் பரல் (கல்) கீழே விழுந்து விடாதாபடி சற்றே திறந்திருக்கும் சதங்கையின் வாய்போல் உன் தாமரைக் கண்களை நீ மெல்ல மெல்லத் திறக்கவேண்டும் என்கிறாள்! மலர்ந்தும் மலராத மலர் போலே இமைகளைச் சடக்கென முழுவதுமாகத் திறக்காமல் **சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ** என்று பாடுகிறாள். செந்தாமரை மலர்ந்து கொண்டிருக்கும் அவ்வேளையில் அதைக் காண்பதே கண்களுக்கு விருந்தாகுமன்றோ? புண்டரீகாக்ஷனின் அந்த



அழகினைத் தாமும் காண விரும்பி இங்ஙனம் **சிறுச்சிறிதே** என்று பாடுகிறாள். ஏன் இப்படி மெல்ல மெல்லத் திறக்கவேண்டும்? பளிச்சென்று கண்களை அகல விரித்துப் பார்த்தால் ஆகாதோ என்று கேட்டால் **அறிந்து அறிவித்தனரே** என்றபடி ஸ்வாமி நம்மாழ்வார் தாம் அறிந்து அறிவித்த அனுபவமே இக்கேள்விக்கு விடையாகும்! அதை இவளும் அறிந்தவளே!

அவ்வாழ்வாரைப்போல் எம்பெருமானுடைய ஸம்ச்லேஷத்தை அதாவது அவனை ஆசைதீர அனுபவிக்க இவளும் ஆசைப்படுபவளன்றோ! தான் தொடங்கிய மார்கழி நோன்பிற்கு **நீராடப் போதுவீர்** என்று க்ருஷ்ண ஸம்ச்லேஷத்துக்காகத் தானே தோழிகளையும் அழைத்தாள்? எம்பெருமானை அனுபவிப்பது என்பது **ஏக ஸ்வாது ந புஞ்ஜீத** என்றபடி தனிமையில் இனிமையைத் தவிர்த்து கூடியிருந்து குளிர்தலன்றோ முறையாகும். எனவே கண்களென்னும் இக்கமலங்கள் விரியும் அழகைத் தோழிகளுடன் அனுபவித்து மகிழ அங்கே வந்து நிற்கிறாள்.

திருவாய்மொழி கூறும் ஸ்வாமி நம்மாழ்வாரின் அவ்வனுபவம்தான் என்ன? பார்க்கலாம். எம்பெருமானுடைய ஸம்ச்லேஷத்துக்கு ஆசைப்படும் இவர் **ஆயர்கொழுந்தை என் ஆவி அமரத் தழுவிற்று, இனி அகலுமோ** என்று பாடினார். தொடர்ந்து **பொய் கலவாது என் மெய் கலந்தானே** என்று ஆவியில் கலந்த அவன் தம் மேனியுடனும் தாமாகவே வந்து கலந்ததை மிக அழகாக **இவையும் அவையும் உவையும்** (திருவாய்மொழி 1-9) எனத் தொடங்கிப் பாடுகிறார். ஆழ்வாரை அணைப்பதற்காக ஓடோடி வந்த எம்பெருமான் ஆழ்வாருக்கு அந்த இனிய அனுபவத்தை படிப்படியாக எப்படிக் கொடுத்தான் என்பதைக் கூறுவதே இத்திருவாய்மொழியாகும். ஆச்ரித ரக்ஷணம் எனில் அரைகுலைய தலை குலைய ஓடோடி வரும் இவன் அவர்களை மகிழ்விக்க வரும் பொழுது மெல்ல மெல்ல நிதானமாகத்தான் வருவான்போலும்!

பரமபதம் போவதற்கு நமக்குப் படிக்கட்டுக்களை (பரமபத ஸோபானம்) அமைத்துக் கொடுத்தவர் நம் ஆசார்யோத்தமன் ஸ்வாமி தேசிகன். அவ்விடத்திற்கு படிப்படியாகத்தான் ஏறிச் செல்ல முடியும், சென்று விட்டால் நாம் பெறுவதோ அந்தமில் பேரின்பம்தான்! அதுபோல் ஆழ்வாருடன் கலப்பதால் கிட்டும் பேரின்பத்தை அனுபவிக்கத் திருவுள்ளம் கொண்ட பெருமாளும் தனக்கென்று ஒரு ஸோபானத்தை அமைத்துக் கொண்டானாம்! இதையே ஆழ்வார் இங்கு விவரிக்கிறார்.

ஸாத்மிக்க ஸாத்மிக்க தமக்கு போகப்ரதானம் பண்ணினான் எம்பெருமான் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறர். ஏன் இப்படி? குளப்படியிலே கடலை மடுத்தால் குளப்படியன்றோ விநாசம் அடையும் . ஸர்வேச்வரானான அவனுடைய ஸ்வரூப, ரூப, குண, விபவ, ஐச்வர்ய, சீலம் என்று எதை எடுத்தாலும் அதை அனுபவிப்பது என்பது ஆனந்தமே ஆகிலும் ஜீவாத்மாக்களின் ஞானமோ குளப்படியே! எனவே எம்பெருமான் அடியார்களுக்கு இவ்வனுபவங்களை சிறிது சிறிதாகவே கொடுக்கிறான். திடீரென்று இந்த ஆனந்த அனுபவம் உண்டானால் அதை ஆழ்வாருடைய மென்மையான உள்ளம்தான் தாங்குமோ அல்லது அதுவே காரணமாக முடிந்துவிடுவாரோ என்று ஐயப்பட்டானாம் எம்பெருமான்! எனவேதான் ஸாத்மிக்க ஸாத்மிக்க அந்த அனுபவத்தைக் கொடுத்தான் என்று அருளிச் செய்கிறார். பத்துப் பாசுரங்களில் ஆழ்வார் பாடிய இதைத்தான் ஆண்டாளும் **சிறுச்சிறிதே** என்று ஒரே வார்த்தையில் வெளியிடுகிறாள்! இது கோதையின் இன்தமிழ்! ஒரு தாய் தன் சின்னஞ்சிறு குழந்தைக்கு அன்னத்தை குழைத்துக் குழைத்து சிறிது சிறிதாக ஊட்டுவதுபோல் அந்த அனுபவத்தை பொறுக்கப் பொறுக்க கொஞ்சம் கொஞ்சமாய் கொடுத்தான் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். **காருண்யத்துக்கும் மேம்பட்ட உயர்ந்ததான எப்பேற்பட்ட ஒரு கல்யாண குணம்** என்று இதைக் காட்டி நெஞ்சம் நெகிழ்கிறார்! இதை நம் ஆசார்ய ஸார்வபௌமராகிய ஸ்வாமி தேசிகனும் தாம் அருளிச்செய்த த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் **ஸாத்ம்ய போகப்ரதத்வம்** என்று இத்திருக்குணத்தைச் சொல்லி இங்ஙனம் ஆழ்வாருக்கு போகப்ரதானம் பண்ணினான் என்று குறிப்பிடுவதுடன் ஆழ்வாரின் ஒவ்வொரு பாசுரத்தின் கருத்தையும் அதன்மூலம் நாம் அறிந்துகொள்ளவல்ல

## New Matrimonial Column

We are also happy to inform our readers that, based on requests from several parents in our community, Desika Sandesam will soon introduce a special Matrimonial Column in the magazine as a **free service** to our society. Interested parents may share the details of prospective brides and bridegrooms, and this new feature is proposed to be introduced soon. Parents who wish to participate may kindly furnish the details at the temple office in advance so that they can be included in the upcoming issue.

**- Trustees**

எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களையும் வடமொழியில் ஓரோர் சொற்கொண்டு மிக அழகாக அருளிச்செய்திருப்பது தமிழ் அறியாதோரும் ஆழ்வாரின் திருவுள்ளத்தை உணர்ந்து அனுபவித்து மகிழப் பேருதவியாகத் திகழ்கின்றது என்பது மறுக்கவியலா மெய்யாகும்!

**இவையும் அவையும் உவையும்** பதிகத்தில் ஆழ்வாரின் அனுபவத்தை இனிக் காண்போம். எம்பெருமான் முதலில் ஆழ்வாரின் திருமாளிகை இருந்த பகுதிக்கு வந்து வெளிச்சுற்றில் சுற்றி சுற்றி வந்தானாம். பிறகு உள் சுற்றில் வந்து நின்றானாம். முதல் இரு பாசுரங்களில் இதைக் கூறியவர் இச்சமயத்தில் தம்மை வசீகரிப்பதற்காக அவன் எடுத்த சில அவதாரங்களைப் பற்றிப் பேசுகிறார் ஆழ்வார். **கேழல் ஒன்றாகி உலகை இடந்த கேசவன்** என்று பாடியதும் ஆண்டாளுக்கும் தன் பூர்வ வ்ருத்தாந்தம் நினைவில் நிழலாடுகிறது. வராஹ மஹிஷியாக வந்து **அஹம் ஸ்மராமி மத் பக்தம் நயாமி பரமாங்கதிம்** என்று சரணாகதியாகிய உபாயத்தை அருளிச்செய்த அவ்வெம்பெருமானின் திருவாக்கினை பத்திரமாக முந்தானையில் முடிந்து வைத்துக்கொண்டு அச்சரணாகதி மார்க்கத்தைத் தம் மக்களாகிய மானிடவர்க்கென்று அறிவிக்க வந்தவளன்றோ **ஸாக்ஷாத் க்ஷமாம்** எனப்படும் இந்த நாச்சியார்! எனவே அவ்வராஹப் பெருமானைக் குறிப்பிட்டுப் பேசிய ஆழ்வாரின் அனுபவத்தைத் தானும் உள்வாங்கி **சிறுச்சிறிதே** என்று ஸாதித்தருளுகிறாள் போலும்!

இத்திருவாய்மொழியின் மூன்றாவது பாசுரத்தில் உள்ளே வந்த பெருமாள் மெல்ல மெல்லத் தன்னருகே வந்து அவன் திருமேனியின் நீல வண்ணத்தை நான் உணரும்படி இடைவெளியின்றி இடித்துக் கொண்டு தன்னருகில் வந்து நின்றதைப் பேசுகிறார். பின்னர் பார்த்துக்கொண்டே இருக்கும்போதே யசோதையின் இடுப்பில் அமர்வதுபோல சடக்கென என் இடுப்பில் வந்து அமர்ந்தானென்கிறார். இந்த முன்னேற்றத்தை ஆழ்வார் தாங்கிக் கொள்கிறாரா என்று அவர் திருமுகத்தை நோக்கியவாறு அடுத்து அவருடைய திருவுள்ளத்தில் போய் அமர்ந்து கொண்டானாம். பின்னர் பெரிய திருவடியின் தோள்களைப்போல தம்முடைய தோள்களில் ஏறி அமர்ந்து கொண்டதை அனுபவிக்கிறார். தனக்கு இஷ்டமான வஸ்துவை தன் திருமேனி முழுவதும் படும்படி செய்வதுபோல தன் பக்தருடைய அங்கங்களிலெல்லாம் தாம் ஸம்ச்லேஷத்தைப் பெறவேண்டும் என்னும் ஆசையினால் தான் இஷ்டப்படும் துளசியை அணிந்துகொண்டு தோளில்



வீற்றிருக்கிறான் என்கிறார். இதனைத் தொடர்ந்து **என்னுடை நாவிலுளானே** என்றபடி நாவிலும், அதன்பின் ஆழ்வாரின் கண்ணிலும் அமர்ந்து பின்னர் அங்கிருந்து சிறிது நகர்ந்து அப்பெருமான் **வந்தெனது உச்சியுளானே** என்று அருளிச் செய்தபடி ஆழ்வாரின் உத்தம அங்கமான தலையின் மேலே இருந்து அருளினான் என்று அற்புதமாக விவரித்தருள்கிறார்! தேவர்களுக்கும் தேவனாய் இருக்கச்செய்தே என்னை ஆதரித்து என் உச்சியிலே வந்து நின்றானே என்று ஆழ்வார் நெக்குருகி எம்பெருமான் செய்த இவ்வுபகாரத்தைப் பாசுரங்களாக்கிப் படைத்தருளினார்!

வெகுநாள் உபவாஸம் இருந்தவருக்கு முதலில் விருந்து படைக்கலாமோ? சிறிது சிறிதாகத்தானே உண்ணக் கொடுக்க வேணும்? அதுபோல் கண்ணனின் கண்ணழகில் உள்ளத்தைத் தொலைத்த இப்பெண்களுக்கு எதிரில் மெல்ல மெல்லத்தானே அக்கண்களைத் திறக்கவேணும்! க்ருஷ்ண விக்ரஹம் போல் அழகிய ஒரு சிறுகுழந்தையை எதிரில் கண்டதும் ஓடிப்போய் தூக்கிக் கொள்ளமுடியுமோ? குழந்தை மிரண்டுபோய் அழத் தொடங்கிவிடுமன்றோ! மெதுவாக அதனருகில் சிரித்தபடியே சென்று முதலில் அதன் கால்விரல்களைத்தொட்டு கையைத்தொட்டு கன்னத்தைத்தொட்டு என்று படிப்படியாகப் பரிச்சயம் பண்ணிக் கொண்டல்லவோ குழந்தையைத் தூக்கிக் கொள்ளவேண்டும்?

இப்படியான முறையைக் கையாண்டு ஆழ்வாருக்கு ஸாத்மிக்க ஸாத்மிக்கத் தன் ஸம்ச்லேஷத்தை ஸர்வேச்வரன் அருளியதைக் கருத்தில் கொண்டே ஆண்டாளும் **செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ** என்று அருளிச் செய்கிறாள். வாக்கினை வழங்குபவள் இக்கோதா மாதா! இவளுடைய சொற்கள் ஆழம் மிக்கவை! சுவை மிக்கவை! அச்சுவையை ஆசார்யர்களின் திருவருளின் துணைகொண்டு அனுபவிப்பது நாம் பெறும் பெரும் பேறேயன்றோ!

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# கோதையின் துதியும் கோதாஸ்துதியும்

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

பராபவ ஆண்டு ஆடிமாதத்தில் நூறாவது இதழ் காணும் தேசிக ஸந்தேசத்தின் இவ்விதழில் ஆண்டாளையும் தேசிகனையும் இணைத்து அனுபவித்தல் பொருத்தமன்றோ! ஆண்டாள் அருளிய திருப்பாவைக்கும் ஸ்வாமி தேசிகன் அருளிய கோதாஸ்துதிக்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன என்று நம் பெரியோர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை இந்த இதழில் அனுபவிப்போம்!

கோதாஸ்துதியில் ச்லோகங்களின் எண்ணிக்கை 29. தத்வங்களின் எண்ணிக்கை என்று பார்த்தால், ஜடம் 24, ஜீவாத்மா 1, 26-வது தத்துவமாகிய பெருமாள் 1, அவருடைய தேவிமார் 3. ஆக தத்வக் கணக்கு மொத்தம் 29-ஐ ஸ்வாமி அநுஸரித்ததாயிருக்கலாம் என்று பெரியோர் காட்டுவர். கோதை பாடின திருப்பாவையின் கணக்கு 30-ல் 'பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத்தமிழ்மாலை முப்பதும்' என்று திருப்பாவையின் வர்ணனனையைச் சொல்லும் கடைசிப் பாட்டைச் சேர்க்காமல் சிற்றஞ்சிறு காலையோடு பூர்த்தி செய்து 29 கணக்காகத் திருவுள்ளமாயிருக்கலாம் என்றும் கூறுவர்.

இங்கே 29-ம் ச்லோகத்தில் சரண கமல ஸேவாம் **சாஸ்வதீம் அப்யுபைஷ்யந் என்று இருப்பது** 'உன்னைச் சேவித்து உன் பொற்றாமரையடியே போற்றும் பொருள்', **நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம்** என்று 29-ம் பாட்டிலுள்ளதையே அநுஸரிப்பது தெளிவு. **இதி பஹுகுணரமணீயாம் வக்தி கோதாஸ்துதிம்ய:** என்று 29-ம் ச்லோகத்திலுள்ளது. 30-ம் பாட்டில் கோதை சொன்ன **சங்கத் தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே இங்கிப்பரிசுரைப்பார்** என்பதை முற்றும் ஒத்திருப்பதும் தெளிவாம்.

'இதி வக்தி' என்பதற்கு 'மலர்ந்த பக்தியோடு தேசிகன் (வேங்கடேசன்) மனதிலிருந்து உருகி (வாக்காக) வெளிவரும் ப்ரகாரமாக இப்படியே யார் தப்பாமே உச்சரிக்கிறாரோ' என்பது பொருள். 'இப்பரிசுரைப்பார்' என்பதற்கும், 'கோதை எப்படி பக்தி வெள்ளமாக மனமகிழ்ந்து உரைத்தாளோ அப்படியே ஓதுபவர்' என்பது பொருள். ரங்கராஜனிடம் கோதையின் பக்தியையொக்கும், கோதையிடம் ஸ்ரீதேசிகன் பக்தி. 'சங்கத் தமிழ்மாலை' என்பதற்குச்



சிறந்த தமிழாகிய சங்கத் தமிழாலியற்றிய பாமாலை என்றும் சொல்லலாம். **பஹுகுண ரமணீயாம்** என்பது சங்கத் தமிழ்போல உயர்ந்த ஸம்ஸ்க்ருதமான வைதர்ப்பீ பாஞ்சாலீ முறைகளிலமைந்தது இத்துதி; அதன் காரணம் கோதையின்னருளே என்று சொல்லலாம்.

இத்துதியை ஓதுபவன் ஸ்ரீமானான ரங்கபர்த்தாவுக்கு பஹுமாந்யனாவான் என்கிறார் ஸ்வாமி. திருப்பாவை முப்பதுந் தப்பாமே உரைப்பவர் **ஈரிரண்டு மால்வரைத்தோள் செங்கட்திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்குந் திருவருள் பெற்று இன்புறுவர்** என்றாள் கோதை. கோதைக்கு **செங்கட் திருமுகத்துச் செல்வத் திருமால்** ஸ்ரீ ரங்கராஜன். **ஆண்டாளரங்கர்க்குப் பன்னு திருப்பாவை** என்றபடி ஸ்ரீ ரங்கராஜனே திருப்பாவைக்கு விஷயம். இம் முப்பதுந்தப்பாமே உரைப்பதனால் திருமாலால் வையத்து வாழ்வோர்கள் அருள்பெற்று இன்புறச் செய்வதே தனக்குப் 'பாவை', 'விரதம்' என்பதை 'என்பாவாய்' என்றடுத்த ஆண்டாளின் பேச்சால் காட்டப் படுகிறது. வாக்கைக் கொடுத்த கோதை விஷயமான இந்த ஸ்துதி 29-ம் கோதை சொல்லுவித்தது ஆகையால் இதற்கும் திருப்பாவையை ஓதுவது போல பலன் உண்டென்பது ஸ்வாமியின் திருவுள்ளம்.

இங்கே **விஷ்ணுசித்த குலநந்தந** என்பதால் ''ஜநகவம்சத்து அரசர்கள் குலத்திற்கு என் பெண் கீர்த்தியைக் கொணர்வாள்'' என்ற ஜநகர் வார்த்தையை நினைக்கவேண்டும். ஸ்ரீவிஷ்ணு சித்தருடைய குலமென்னும் நந்தவனத்தோட்டத்தில் (தோன்றிய) கற்பகக்கொடியும், ஸ்ரீரங்கராஜனென்னும் ஹரிசந்தன கற்பகவ்ருக்ஷத்தை அணைவதால் (மணம் புரிவதால்) பார்க்கத்தக்கவளாயும், க்ஷமையின் வடிவேயானவளாயும் (ஸாக்ஷாத் பூமிதேவியாயும்), கருணையினால் மற்றோர் லக்ஷ்மிதேவி போன்றவருமான கோதையை (வாக்கை யளிக்கும் தேவியை) புகலொன்றில்லாவடியேன் சரணம் பணிகிறேன் என்பது தாத்பர்யம். முன்பு தேவப்பெருமாளும் பெருந்தேவித் தாயாருமாகிய திவ்ய தம்பதிகளிடம் இவர் தன்னுடைய பரத்தை ஸமர்ப்பித்து நிர்ப்பரராய் இருப்பவராயிற்றே, இங்கு கோதையைச் சரணம் புகுவது எதற்காக? என்றால், கோதையை அம்ருதவாக்கால் துதிக்க வேண்டியதற்கு வேண்டியதான அற்புத கவிதா ஸாமர்த்தியத்திற்காக கவிப்பெண்ணான கோதையை இங்கே சரணம் புகுகிறார். 'கோதா' என்கிற திருநாமத்தைச் சொல்லி சரணம் புகுவதாலே இது நன்கு விளங்கும்.

'கோ' என்பது 'வாக்கை, ஸரஸ்வதியை'ச் சொல்லும். கோதா என்பதற்கு 'வாக்கைக் கொடுப்பவள்' என்பது அர்த்தம். வேதங்களால்



கவியென்று புகழப்படுபவரும், கீதை பாடியவருமான பெருமாளுக்கு அற்புதமான பாமாலை கொடுப்பவள் கோதா. என்ன கவிஸிஹ்மமானாலும், ஸ்வயம் அற்புத கவியான கோதைக்கு ஸ்தோத்ர மாலை கொடுக்கத் தமக்குச் சக்தி போதாதென்று பயந்து, அவளே அவளைப் பாட ப்ரஸந்நமதுரமான, பஹுகுணரமணீயமான, ஸரஸ்வத்யாதி புனிதமான மஹாநதிகள் போன்ற கவிதாப்ரவாஹத்தை அளிக்கவேண்டும் என்று இங்கே சரணமடைகிறார். இதை மூன்றாவது ச்லோகத்தில் ''தாயே! நீயே உன்னைத் துதிக்க யோக்யமாக ப்ரஸந்நமதுரமான வாக்கு எனக்கமைய க்ருபை புரியவேணும்'' என்று ப்ரார்த்திப்பதாலும், கடைசி சுலோகத்தில் ''மலர்ந்த பக்தியால் பஹுகுணரமணீயமான இந்த கோதா ஸ்துதி வெளிப்பட்டது'' என்று தாம் கோரிய பலன் ஸித்தித்ததைப் பணிப்பதாலும் விளக்குகிறார்.

ஸீதாதேவி தன் தாய் பூமி தேவியின் ச்ரோத்ரமென்னும் வல்மீகத்தில் (புற்றில்) தோன்றியவரும், 'தன்னுடன்' பிறந்தவருமான வால்மீகி கவியைக் கொண்டு ராமாயணத்தைப் பாடுவித்தாளே ஒழிய, தானே கவிபாடவில்லை. ருக்மிணீதேவி விவாஹத்திற்கு முன் ஸப்தபதியென்னும் விவாஹப் பிரார்த்தனைக்காக ஏழே ச்லோகம் பாடினாள். தேவிமாரில் ஒருவரும் ஆண்டாளைப் போலக் கவிபாடவில்லை. ஆண்டாளுடைய ஸரஸ்வதி குளிர்ந்த ப்ரஹ்மகுண வெள்ளத்தில் நீராடி மகிழச் செய்யும் நீராட்ட ஸரஸ்வதி. அது ஓர் அத்புதமான பக்திவெள்ளம். இங்கே கோதைக்கு ஸ்ரீரங்கராஜனுடைய யோகம் ஏற்படுவதை முதல் ச்லோகத்தின் இரண்டாமடியில் ஸாதிக்கிறார். யோகம் என்பது 'முன்பு அடையப்படாத பொருள் புதிதாக அடையப்படுவதைச் சொல்லும். இங்கே இது இருவருக்கும் கிடைத்தற்கரிதான விவாஹ மங்கள யோகத்தைச் சொல்லும். கற்பகக்கொடி புதிதாக ஹரிசந்தன வ்ருக்ஷத்தைச் சுற்றி அணைவதை இங்கே ஸாதிக்கிறார்.

திவ்ய தம்பதிகளிருவரும் தம்முடைய சுபமான மனதில் த்யானமும் மனோரதமும் செய்து அவர்களுடைய மனதான ஆராமத்தில் (நந்தன வனத்தில்) தோன்றிய கற்பகக் கொடியாவாள் கோதை. ஒன்பதாவது ச்லோகத்தில் ''விஷ்ணுவின் சித்தத்தில் சந்த்ர மண்டலம் உதித்தது போல் நீ உதித்தவள். நீயும் சந்த்ரனுடைய ஒரு மூர்த்தி விசேஷமாவாய். திருப்பாற்கடலில் சந்த்ரனோடு கூட உதித்த பெரிய பிராட்டியாருக்கு நீ உடன் பிறந்தாளுமாவாய்'' என்று ஸாதிப்பதால் இங்கே ஸ்ரீவிஷ்ணுவின் சித்தத்தில் உதித்தவள் என்றும் பொருள் கொள்ளுவது கவியின் கருத்தே. ஸ்ரீவிஷ்ணுசித்தருடைய குலமென்னும் நந்தவனத்தில் தோன்றிய கற்பகக்கொடி என்னும் பொருள் இருக்கவே இருக்கிறது!

''விஷ்ணுவை நினையாதவர் பூமிபாரம் என்றும், அவர்கள் தின்னும் சோற்றைப் பிடுங்கி நாய்க்கிடுமின்'' என்றும் பேசுபவர் விஷ்ணு சித்தர். திருவையும் பெருமாளையும் ஸர்வகாலமும் த்யானித்துக்கொண்டேயிருக்கையில் திருவின் அம்சமான கோதையெனும் தூயகற்பகக்கொடி அவர் தூயசித்தமாகிய பூந்தோட்டத்தில் அவதரித்தாள். க்ருத யுகத்தில் மனதாலே மட்டும் ஸ்ருஷ்டி, உடம்பாலல்ல, கலியிலும் இந்த க்ருதயுகப்பெண் பெரியாழ்வார் சித்தத்தில் ஆவிர்பவித்தாள். ஸீதை கர்மம் தவறாதவரும் ஞானியுமான ஜனகராஜனுடைய யாக பூமியில் அவதரித்தாள். ஜனகரைப்போல பெரியாழ்வாரும் கர்மாவில் வழுவாதவர். ச்ரௌத விஷயமான கல்பஸூத்ர வ்யாக்யானமியற்றியவர். இரண்டாமடியில் ஆண்டாளோடு யோகத்தைச் சொல்லுகையில் சந்தன யோகத்தைப் பேசுவது விவாஹத்திற்கு ஏற்றதாகும்.

பக்தி ப்ரவாஹத்தில் நீராட ஓர் அழகிய துறை வேண்டும். அப்படி அமிழ்ந்து நீராட ஆண்டாளுடைய நீராட்ட ஸரஸ்வதியாக (வாக்காகிய) ப்ரஹ்ம நதி சிறந்த வழிகாட்டும் ஸாதனம். ஆண்டாளுடைய ஸரஸ்வதியை (வாக்கை-நதியை) யமுனையைப் போன்ற மஹாநதியாக வர்ணிக்கிறார். ஸ்ரீ என்று பெரிய பிராட்டியார் திருநாமத்தோடு மங்களமாகத் துதியை ஆரம்பிக்கிறார். **கந்தத்வாராம் துராதர்ஷாம்** என்று வேதம் கொண்டாடிய கந்தங்கமமும் ஸ்ரீயை இருதரமும் இங்கே குறிப்பது பரிமளங்களின் சேர்த்தியைக் காட்டுகிறது. மற்ற தேவிமாரும் கோதையும் ஒரு மனதே என்பதைக் காட்டவும், பூதேவியே கோதை என்பதையும் 'இவள் ஸாக்ஷாத் க்ஷமா தேவியே' என்று முதல் ச்லோகத்தின் மூன்றாமடியில் காட்டுகிறார். ''இவள் பொறுமையின் அவதாரமே'' என்பது அதற்குப் பொருள்; **கருணாமிவ ரூபிணீம்** என்றபடி கருணைக் கடலாகிய லக்ஷ்மீதேவி தயையின் மூர்த்தியாவாள். கோதையும் கருணைக்கடலாகையால், தன்னுடைய எல்லையில்லாத கருணையால் மற்றொரு லக்ஷ்மியே அவளென்கிறார். இப்படி பொறுமைக்கும், கருணைக்கும் நிதியானவளைச் சரண் புகுந்தால் பலன் கிடைப்பது நிச்சயம் என்று விளக்குகிறார்.

இப்படி விரித்துக்கொண்டே போகுமளவிற்கு நம் பூர்வாசார்யர்கள் நுணுக்கமாக ஆய்ந்து அனுபவித்து நமக்குக் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள். விரிவை வல்லார்வாய் கேட்டுத் தெளிக!

*திசைகாட்டும் தேசிகர்க்கு இசைகூட்டும் ஸந்தேசம்*
*நசையுடையோர் நவின்றேற்ற நன்மலராய் நூறிதழாய்ப்*
*பசைகூட்டி பரம்பொருளைப் பாங்காகப் பெறமேலும்*
*விசைகொண்டு வாழ்ந்திடவே வேதவழி வாழ்த்தினமே.*


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான
கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன்,
நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.







## கோடை உத்ஸவம்










## கோடை உத்ஸவம்










கோடை உத்ஸவம்












## கோடை உத்ஸவம்













ஆனி கருடன் - பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்










ஸ்ரீ:



ஆனி கருடன் - பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்







ஸ்ரீ:

கண்ணுக்கினியன





## நாதமுனிகள் திருநக்ஷத்ரம்











ஸ்ரீ:





## ஸ்ரீ ஸுதர்சன மஹாயஜ்ஞம்











கண்ணுக்கினியன





ஸ்ரீ ஸுதர்சன மஹாயஜ்ஞம்









ஸ்ரீ ஸுதர்சன மஹாயஜ்ஞம்







கண்ணுக்கினியன





## ஸ்ரீ ஸுதர்சன மஹாயஜ்ஞம்
















## தேவஸ்தானத்தின் 'கமலா தோதாத்ரி ஹால்' திறப்பு விழா

















## தேவஸ்தானத்தின் 'கமலா தோதாத்ரி ஹால்' திறப்பு விழா

















## தேவஸ்தானத்தின் 'கமலா தோதாத்ரி ஹால்' திறப்பு விழா











## தேவஸ்தானத்தின் 'கமலா தோதாத்ரி ஹால்' திறப்பு விழா

















## தேவஸ்தானத்தின் 'கமலா தோதாத்ரி ஹால்' திறப்பு விழா





ஸ்ரீ:

## ஸ்ரீ ஆளவந்தார் அருளிய

# ஸ்ரீ சது: ச்லோகீ

ஸ்ரீ உ. வே. வில்லிவலம் நாராயணாசார்யர் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

இது ஸ்ரீ ஆளவந்தார் என்கிற யாமுனாசார்யர் அருளியது. நான்கு ச்லோகங்கள் உடையதனால் இந்தப் பெயர் பூண்டது; பெரிய பிராட்டியார் விஷயமானது. பிற்காலத்தில் புறப்பட்ட பிராட்டியின் ஸ்துதிகளுக்கெல்லாம் ஆதி வித்து இதுவே. ஆகவே, அதிஸங்க்ஷிப்தமானது. இதன் கருத்தை இங்கே தருகிறோம்.

*காந்தஸ் தே புருஷோத்தம: பணிபதி: சய்யாகுகுஸநம்*
*வாஹநம் வேதாத்மா விஹகேச்வரோ யவநிகா மாயா*
*ஜகன்மோஹிநீ । ப்ரஹ்மேசாதி ஸுரவ்ரஜ: ஸதயித:*
*த்வத் தாஸதாஸீ கண:*
*ச்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூம: கதம் த்வாம்*
*வயம் ॥ [1]*

அம்மா! உன் கணவனோ புருஷோத்தமனாகிறான். அரவரசன் உனக்குப் புல்கும் அணையும் ஆஸனமும் ஆகியுள்ளான். வேதாத்மாவான வைநதேயன் வாஹன வடிவு கொண்டான். உலகம் முழுவதையும் கவர்ந்திழுக்கும் இயற்கை ப்ரக்ருதி உனக்குத் தொங்கும் திரை. தேவர்களும் அவர் தேவிமாரும் உன்னிடம் பணிபுரியும் ஸேவகர்களும் ஸேவிகைகளுமாக நிற்கின்றனர். உன் திருநாமமும் மிகப் பெரிய சுருக்கமான 'ஸ்ரீ' என்னும் ஒற்றை எழுத்தேயாகும். இவ்விதமாக உள்ள ஸர்வேச்வரியான உன்னை என் சொல்லிச் சொல்லுவேன்? எப்படிச் சொல்லுவேன்?

*யஸ்யாஸ்தே மஹிமாநம் ஆத்மந இவ த்வத்வல்லபோபி*
*ப்ரபு:*
*நாலம் மாதும் இயத்தயா நிரவதிம் நித்யாநுகூலம்*
*ஸ்வத:*
*தாம் த்வாம் தாஸ இதி ப்ரபந்ந இதிச*
*ஸ்தோஷ்யாம்யஹம் நிர்ப்பய:*
*லோகைகேச்வரி லோகநாததயிதே தாந்தே தயாம் தே*
*விதந் ॥ [2]*

ஸர்வ லோகேச்வரி! உன் உன் கணவன் எல்லாம் வல்ல இறைவனேயாகிலும், உன் பெருமைகளைத் தன் பெருமைகளைப் போலவே அறியமாட்டான், இவ்வளவென்று திட்டமாக. அவை இயல்பாகவே அநுகூலமாக நன்கு அமைந்து எல்லையைக் கடந்து நிற்கின்றன அல்லவா? அப்படிப்பட்ட உன்னை, ஹே! லோகநாதனின் நாயகியே! உன் அடியன் என்றும், உன் அடியை அடைந்தவன் என்றும் ஒருவாறு உள்ளத்தில் பயங்கெட்டு, உன் அருளை நம்பித் துதிக்க ஆரம்பிக்கிறேன்.



*ஈஷத் த்வத்கருணா நிரீக்ஷண ஸுதாஸந்துக்ஷணாத்*
*ரக்ஷ்யதே*
*நஷ்டம் ப்ராக் ததலாபதஸ் த்ரிபுவநம்*
*ஸம்ப்ரத்யநந்தோதயம் ।*
*ச்ரேயோ நஹ்யரவிந்த லோசநமந:*
*காந்தாப்ரஸாதாத்ரிதே ஸம்ஸ்ருத்யக்ஷர*
*வைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே*
*கர்ஹிசித் ॥ [3]*

தாயே! உன் சிறிய அருள் பார்வையும் போதும். அது இல்லாமையினாலன்றோ உலகம் முன்பு ப்ரளய காலத்தில் உலர்ந்து ஒழிந்தது? மீண்டும் இப்போது அது பெற்றுப் பிறந்து பலவாறு படருகிறது. அரவிந்தலோசனன் மனமுவக்கும் மஹிஷியான உன் அநுக்ரஹமின்றி, உலகில் இங்கோ, மேலுலகில் அங்கோ, இப்போதோ, எப்போதோ, மனிதர்களுக்கு ஏதும் மகிழ்ச்சி உண்டாகாது அன்றோ?

*சாந்தாநந்த மஹாவிபூதி பரமம் யத்ப்ரஹ்ம ரூபம் ஹரே:*
*மூர்த்தம் ப்ரஹ்ம ததோகுபி தத்ப்ரியதரம் ரூபம் யத்*
*அத்யத்புதம் ।*
*யாங்யந்யாநி யதாஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி*
*தாநி*
*ஆஹு: ஸ்வைரநுரூப ரூப விபவை: காடோப*
*கூடாநிதே ॥ [4]*

மஹாலக்ஷ்மீ! சாந்தமாய், அநந்தமாய், ஆனந்தமாய் உள்ள மஹா விபூதி என்னும் பகவானின் ஸ்வரூபத்திலும், அதனினும் அவனுக்கு மிகவும் பிடித்தமான மூர்த்த ப்ரஹ்மம் என்னும் அவனுடைய அத்புதத் திருவுருவத்திலும், மற்றும் அவன் தன் ஸங்கல்பத்தினால் பலவாறாக அவ்வப்போது எடுத்து மகிழும் ராம, க்ருஷ்ணாதி அவதார விக்ரஹங்களிலும் நீ உன் இச்சைப்படி எடுத்துக்கொண்ட, அவ்வவற்றுக்கு ஏற்ற அமைப்பு, குணங்கள், பெருமை முதலியன உடைய உன் ஸ்வரூப ரூபாதிகள் கலந்து நிற்கின்றன. ❋

ஸ்ரீ:

# ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் ⑥
## அதிகாரம் - 3 - சரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்ச:
## அயோத்யா காண்டத்தில் சரணாகதி

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஆரண்ய காண்டத்தில் காட்டப்படும் சரணாகதி வ்ருத்தாந்தங்களை அநுபவிப்பதற்கு முன்பாக ஸ்வாமி தேசிகன் ஒரு ஸ்வாரஸ்யமான விஷயத்தை அருளிச்செய்கிறார். ஸ்வாமி கூரத்தாழ்வான் தேவப்பெருமாளிடத்தில் மோக்ஷப்ராப்தியைப் ப்ரார்த்தித்தார். அதற்கு தேவப்பெருமாள், ''உமக்கு மோக்ஷமளிக்க நான் எந்த உபாயத்தை அங்கீகரிப்பது? தேவரீர் எந்த உபாயத்தை அநுஷ்டித்தீர்?'' என்று கேட்பது போல் திருவுள்ளம் பற்ற, ஆழ்வான் பின்வரும் ச்லோகத்தை அருளிச் செய்கிறார்:

*த்வாமாமநந்தி கவய: கருணாம்ருதாப்தே !*
*ஜ்ஞாநக்ரியா பஜநலப்யமலப்யமந்யை: ।*
*ஏதேஷு கேந வரதோத்தரகோஸலஸ்தா:*
*பூர்வம் ஸதூர்வமபஜந்த ஹி ஜந்தவஸ்த்வாம் ॥*
*[ஸ்ரீவரதராஜ ஸ்தவம் – 69]*

''கருணைக்கடலான தேவப்பெருமாளே! ஹே வரத! உன்னை ரிஷிகளெல்லாம் ஜ்ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் ஆகியவற்றினாலேயே அடையத்தக்கவனாகவும், வேறு உபாயங்களால் அடைய முடியாதவனாகவும் கூறுகிறார்களே. அப்படியானால், உத்தரகோஸல தேசத்தில் வாழ்ந்த புல் முதலான ஸகல ஜந்துக்களும் இவற்றுள் எந்த உபாயத்தை அநுஷ்டித்து உன்னை அடைந்தார்கள்?'' என்று வினவுகிறார்.



ஆக, ச்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணன், ஒருவனை ரக்ஷிக்க ஹேது என்ன? அவன் கர்ம-ஜ்ஞான-பக்தி யோகங்களை அநுஷ்டித்தே தீர வேண்டுமா இல்லை வேறொரு உபாயத்தை பண்ண வேண்டுமா?

ஸ்வாமி நம்மாழ்வாரோவென்னில் பெருமாள் ராமன் ஆளுகைக்கு உட்பட்ட ப்ரதேசத்தில் வஸிப்பதே நற்கதியை அளிக்கவல்லது என்கிறார்:

*கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?*
*புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே*
*நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்*
*நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.*
*[திருவாய்மொழி 7-5-1]*

என்கிற அருளிச்செயலின்படி, அயோத்தியில் வாழ்ந்த அத்தனை சேதன-அசேதனங்களுக்கும் பெருமாள் நற்கதியை அருளினார். இதற்குக் காரணம் அயோத்தி வாஸமே. ஏனெனில், ஸ்ரீராமனுடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இருப்பதே அவர்களுக்குப் பெரும் பாக்ய விசேஷமாக அமைந்தது. தன்னுடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இருக்கும் புல்லாக இருந்தாலும், எறும்பாக இருந்தாலும், அவை அனைத்தையும் ரக்ஷிப்பது தன்னுடைய கர்த்தவ்யம் என்று பெருமாள் திருவுள்ளம் பற்றியிருந்தார். அந்த ஸங்கல்பத்தின் பலனாகவே, அயோத்தியில் இருந்த ஜங்கம-ஸ்தாவரம் என்ற பாகுபாடின்றி, உபாயத்தை அநுஷ்டிக்கலாம் என்று எண்ணக்கூட இயலாத அனைத்து ஜீவராசிகளும் அவருடைய பரமகாருண்யத்திற்குப் பாத்ரமாகி நற்கதியை அடைந்தன.

அப்படிப்பட்ட பாக்ய விசேஷமே ஆரண்ய காண்டத்திலும் வேறொரு வடிவில் வெளிப்படுகிறது. தண்டகாரண்யத்தில் வாழ்ந்த மஹர்ஷிகள் எவ்வாறு அந்த ரக்ஷகத்வத்தைப் பற்றிக் கொண்டு ஸ்ரீராமனிடம் சரணாகதி செய்தார்கள் என்பதனை இனி அநுபவிப்போம்.

**மஹர்ஷிகள் சரணாகதி**

அயோத்திக்கு அருகிலுள்ள சித்ரகூடத்தில் தொடர்ந்து தங்கியிருந்தால் தமது வனவாஸத்தின் உத்தேசயம் நிறைவேறாமல் போய்விடுமோ என்று திருவுள்ளம் பற்றிய பெருமாள், அங்கிருந்து தண்டகாரண்யத்தில் அமைந்திருந்த ஆச்ரமங்களுக்கு எழுந்தருளினார். ப்ரஹ்மவித்துக்கள் நிறைந்திருந்த அவ்விடத்திற்கு ஸ்ரீராமன் எழுந்தருளியவுடன், அங்கிருந்த மஹர்ஷிகள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பூர்ணகும்ப மரியாதையுடன் அவரை வரவேற்கின்றனர். ஸீதாபிராட்டிக்கு தீர்கஸுமங்கலி ப்ராப்தியையும், இளையபெருமாளுக்கு இடைவிடாத கைங்கர்ய ப்ராப்தியையும், ஸ்ரீராமனுக்கு தர்ம மார்க்கத்தில் ராஜ்யசாஸனம் செய்யும் பேற்றையும் ஆசீர்வதிக்கின்றனர்.

தன்னுடைய தற்போதைய நிலையை எண்ணி, ராஜஉபசாரங்களை ஏற்றுக்கொள்ளத் தாம் தகுதியுடையவரா என்ற ஸங்கோசம் ஸ்ரீராமனுக்கு ஏற்பட, அதற்கு மஹர்ஷிகள், ஆச்ரமத்தின் ஒரு பகுதியில் குவிந்திருந்த எலும்புக் குவியல்களைக் காட்டி ''ராமா! எத்தனையோ காலம் தபஸ் செய்து கொண்டிருந்த முனிவர்களை, நரமாம்சம் பக்ஷிக்கும் ராக்ஷஸர்கள் கொன்று தூக்கி எறிந்த எலும்புத்துண்டுகளே இவை. அந்த ராக்ஷஸர்களிடமிருந்து எங்களை ரக்ஷித்து, நாங்கள் இடைவிடாமல் யோகத்தில் ஈடுபட நீயே அநுக்ரஹிக்க வேண்டும் என்றனர். மேலும்,

*தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிந: ।*
*நகரஸ்தோ வநஸ்தோ வா த்வம் நோ ராஜா ஜநேச்வர: ॥*
*[ஆர. கா. 1-20]*

''பட்டணத்தில் இருந்தாலும், வனத்தில் இருந்தாலும் நீயே எங்களுக்கு அதிபதி; நீயே எங்கள் அரசன். நாங்கள் அனைவரும் உன்னுடைய ஆளுகையிலேயே இருக்கிறோம். ஆகையால் எங்களைக் காக்க வேண்டியது உன் கடமை'' என்று கூறி, அவருடைய திருவடிகளில் சரணாகதி செய்தனர்.

அவ்வெலும்புக்குவியல்களைக் கண்டு திருவுள்ளம் மிகவும் வருந்திய பெருமாள், ''உங்களுடைய தபஸ்ஸிற்கு இடையூறாக இருக்கும் அந்த ராக்ஷஸர்களை நான் பூண்டோடு நாசம் செய்தே தீர்வேன்'' என்று ப்ரதிஜ்ஞை செய்தருளி, அவர்களுடைய சரணாகதியை ஸம்பூர்ணமாக அங்கீகரித்து, தபஸ்ஸிற்குத் தடங்கலாக இருந்த அத்தனை ராக்ஷஸர்களையும் அழித்து ரக்ஷணம் பண்ணினார்.

இங்கேயும், கர்ம-ஜ்ஞான-பக்தி யோகாதிகளை அநுஷ்டியாத அம்மஹர்ஷிகளை ராமன் ரக்ஷிக்க ஹேது என்ன என்னில்: -

**ரக்ஷாபேக்ஷை பண்ணும்போது வேறோர் உபகாரம் பண்ணவேண்டா; அபிமான-கோசரமான விஷயத்தில் அநந்ய சரணதையை வெளியிட்டுக் கிடக்கவமையும் –**

என்று ஸ்வாமி தேசிகன் அத்புதமாக மூலத்தில் ஸமாதாநம் ஸாதித்தருள்கிறார். தங்களுடைய இயலாமையை முன்னிட்டுக்கொண்டும், அந்த ராமன் தவிர வேறு கதி இல்லை என்றும் அந்த ராமனின் ரக்ஷ்யவஸ்துவாகவே தாங்கள் இருப்பதையும் - இப்படிப் பலவாறாக தங்களுடைய ஆகிஞ்சந்ய-அநந்ய கதித்வங்களை மஹர்ஷிகள் ஸ்பஷ்டமாக ப்ரகடனம் பண்ணினார்கள். இப்படி சரண் புகுந்தவர்களை, சக்ரவர்த்தித் திருமகன், 'இவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள்' என்னும் அபிமானத்தை அவர்களிடத்தில் வெளியிட்டருளி, அவர்களை ரக்ஷித்தருளினார்.

*மேம்பொருள் போக விட்டு மெய்ம்மையை மிக உணர்ந்து*
*ஆம்பரிசறிந்து கொண்டு ஐம் புலன் அகத்தடக்கி*
*காம்பறத் தலை சிரைத்து உன் கடைத்தலை இருந்து வாழும்*
*சோம்பரை உகத்தி போலும் சூழ் புனல் அரங்கத்தானே!*
(திருமாலை - 38)

என்று பெருமாளுக்கு தன்னிடத்தில் சரணாகதி பண்ணியவர்களிடத்தில் உள்ள மிகுந்த ப்ரீதியை ஆழ்வார் பாசுரங்கொண்டு ஸ்வாமி தேசிகன் இவ்விடத்தில் நிர்தாரணம் பண்ணுவது நன்கு சுவைக்கத்தக்கது.

**காகாஸுரன் சரணாகதி**

ஸ்ரீராமரும் ஸீதா பிராட்டியும் சித்ரகூடத்தில் எழுந்தருளியிருந்தபோது, தேவேந்த்ரனின் மகனான ஜயந்தன் காக்கை வடிவம் எடுத்து வந்தான். பிராட்டியின் அபார ஸௌந்தர்யத்தைக் கண்டு காமவசப்பட்ட அவன், பிராட்டியின் திருமார்பில் தன் அலகினால் காயப்படுத்தினான். அப்போது ஸ்ரீராமன் பிராட்டியின் மார்பில் இரத்தம் வழிவதைக் கண்டு மிகுந்த சீற்றங்கொண்டு, அருகிலிருந்த ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து அதனைப் ப்ரஹ்மாஸ்த்ர சக்தியுடன் அபிமந்த்ரித்து காகாஸுரனை நோக்கி ஏவ, அதிலிருந்து தப்பிக்க அவன் அனைத்துலகும் ''என்னைக் காக்க வல்லார் உண்டோ'' என்று கதறித் திரிந்தோடினான்.

ஸம்ஹார காலத்தில் ப்ரஜைகளை அழச்செய்வதால் ருத்ரனென்னும் பேர்பெற்று, மன்மதனைக் கொளுத்தும் மூன்றாவது கண் இருப்பதால் முக்கண்ணன்எனப்படும்சிவனிடத்திலும்,சிவனுக்குத் தந்தையும், கர்மவச்யரைப் போல் பிறக்கையின்றி தானே பிறந்த ஸ்வதந்த்ரனும், ஒரே காலத்தில் நான்கு வேதங்களையும் உச்சரிக்கின்ற நான்கு முகங்களால் பெருமை பெற்றவனுமாகிய ப்ரஹ்மதேவனிடத்திலும்

முறையிட்டுப் பயனில்லாமல் போக, பின் தன் தந்தையான ஸகல ஐச்வர்யத்தோடு கூடினவனும், வ்ருத்ராஸுரனைக் கொன்றதனால் மஹேந்த்ர பதத்தில் அபிஷேகம் பண்ணப்பட்டவனும், ஸகல தேவகணங்களுக்கு ஸஹாயமாய் இருக்கப் பெற்றவனுமாகிய இந்த்ரனிடத்தில் முறையிட்டான். பெற்ற பிள்ளைகளை ரக்ஷிப்பதென்பது பெற்றோர்களின் கடமை, இருப்பினும் இவன் பண்ணிய மஹாபாபத்தைக் கண்டு இந்திரனும் கை விரித்தான். தேவலோகத்திலுள்ள அத்தனை தேவர்களும் இவனை ரக்ஷிக்க மறுத்தனர். சரணாகதியை உபதேசம் பண்ணும் மஹர்ஷிகளும் இவனை ரக்ஷணம் பண்ணவில்லை. காகத்தின் இந்நிலைக்குக் காரணம் எம்பெருமானின் நிக்ரஹம். இந்த நிக்ரஹ ஸங்கல்பத்தை எதிர்த்து யாரால் தான் செயல்பட முடியும்? எவராலும் முடியாது என்பதனை தேவர்களும் முனிவர்களும் நன்கு அறிந்திருந்தனர். மேலும், **எங்கும் போய் கரைகாணாதே எறிகடல் வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறு மாப்பறவை** என்பதுபோல ராமன் ஒருவனால் மட்டுமே இக்காகத்தை ரக்ஷிக்க முடியுமென்பதை நன்கு அறிந்திருந்த அவர்கள் காகாஸுரனைத் ஆதரியாமல் துரத்திக் கதவடைத்தார்கள்.

இதனை வால்மீகி மஹர்ஷியின் ச்லோகத்தைக் கொண்டு மூலத்தில் ஸ்தாபிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

*ப்ரஹ்மா ஸ்வயம்பூச்சதுராநநோ வா*
*ருத்ரஸ்த்ரிநேத்ரஸ்த்ரிபுராந்தகோ வா ।*
*இந்த்ரோ மஹேந்த்ரஸ்ஸுரநாயகோ வா*
*ஸ்தாதும் ந சக்தா யுதி ராமவத்யம் ॥*
(ஸுந். கா. 51-45)

**த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை:** - என்று ஆசார்யனே ஸ்ரீந்ருஸிம்ஹன் விஷயமாக அருளிச்செய்வது இங்கு நன்கு சுவைக்கத்தக்கது.

இவ்விடத்தில் ஸ்வாமி தேசிகன் மேலும் ஒரு ஸ்வாரஸ்யமான விஷயத்தை அருளிச்செய்கிறார். காகாஸுரன், பெருமாள் எழுந்தருளியிருக்கும் திசையைத் தவிர்த்து வேறு எங்கு சென்றாலும், ப்ரஹ்மாஸ்த்ரத்தின் வீர்யம் பன்மடங்கு மிகுதியாகி அவனை விடாது தொடர்ந்து வேகமாக துரத்திக் கொண்டே இருந்தது. ஆனால், அவன் ஸ்ரீராமன் இருந்த திசையை நோக்கித் திரும்பியபோது, அஸ்த்ரத்தின் வேகம் சற்றுத் தணிந்தது. ராமனுடைய உத்தேச்யம் காகாஸுரனை வதம் பண்ணுவது அன்று, மாறாக அவன் தீய எண்ணத்தைப் போக்கி அவனை வழிபடுத்துவதே. எம்பெருமானின் இத்திருவுள்ளத்திற்கு இணங்கியே அஸ்திரத்தின் கார்யம் அமைந்தது என்கிறார்.

**த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய த்வமேவ சரணம்கத: -** மூவுலகும் சுற்றித்திரிந்து வேறு கதியொன்றையும் காணாமல் அந்த காகம் ராமனையே சரணமடைந்தது.

*ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்யச் சரணாகதம் ।*
*வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் ॥*

ஸர்வலோக சரண்யனான காகுத்தன் தன்முன்பே பூமியில் விழுந்து சரணமடைந்த அந்த காகத்தை அது வதார்ஹனாக (கொல்லப்படுவதற்கே தகுதியுடையதாக) இருந்தபோதிலும், தயையினால் காப்பாற்றினார். ப்ராணனை விரும்பி சரணாகதி பண்ணினதனால், அவனுக்கு ரக்ஷை என்னும் பலன் ஸம்பூர்ணமாக ஏற்பட்டது. ஆயினும், துரெண்ணத்தோடு ஸீதா பிராட்டியிடம் அபசாரம் செய்த இக்காகத்திற்கு ஏதோ ஒரு சிக்ஷை அளிக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றிய பெருமாள், அதன் ஒரு கண்ணை மட்டும் கீறி, உயிரைப் பறிக்காமல் ரக்ஷித்தார்.

இப்படி எவ்வளவு ப்ராயச்சித்தங்களாலும் நீக்க முடியாத மஹாபராதங்களை ஒருவன் செய்திருந்தாலும், எம்பெருமானை ஒரு கணமும் விட்டுப் பிரியாத பிராட்டியின் புருஷகாரத்தையும், அவள் பரிந்துரையையும் மறுக்கமாட்டான்; கேட்டே தீர்வான் என்னும் எம்பெருமானுடைய ஸ்வபாவத்தையும் முன்னிட்டுக்கொண்டு, ''எம்பெருமானைத் தவிர எனக்கு வேறு புகலிடம் இல்லை'' என்று அவருடைய திருவடிகளில் வந்து விழுந்தால், அவனுக்கு ரக்ஷை என்பது திண்ணம் என்பதை மஹர்ஷிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் ஆகியோரின் திருவாக்குகளைப் ப்ரமாணமாகக் கொண்டு ஸ்வாமி தேசிகன் ஸ்தாபித்தருள்கிறார்.

இவ்வாறு ஆரண்யகாண்டத்தில் இடம்பெறும் மஹர்ஷிகளின் சரணாகதியும் காகாஸுரனின் சரணாகதியும், எம்பெருமான் ஜீவனை ரக்ஷிக்க கர்ம-ஜ்ஞான-பக்தி யோகாதிகளை எதிர்பார்க்கவில்லை என்பதையும், மாறாக தன்னுடைய இயலாமையை உணர்ந்து, ''நீயன்றி வேறு கதி இல்லை'' என்று அநந்ய சரணனாய் அவன் திருவடியில் விழுவதே ரக்ஷைக்குப் போதுமான ஹேது என்பதையும் நன்கு தெரிவிக்கின்றன. மேலும், சரணாகதன் எவ்வளவு பெரிய அபராதங்களைச் செய்திருந்தாலும், பிராட்டியின் புருஷகாரமும், சரணாகதனை ஒருபோதும் கைவிடாத எம்பெருமானுடைய நிர்ஹேதுக கருணையும் அவனுக்கு நிச்சயமான ரக்ஷையை அருளும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.

**(தொடரும்...)**

ஸ்ரீ:

# வராஹன் நூறு

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி -** தர்மத்திற்கு ஹாநி நேர்ந்து
**அப்யுத்தாநம் அதர்மஸ்ய -** அதர்மம் தழைத்தோங்கும்
**ததா** - போதெல்லாம்
**ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம் -** என்னை நானே படைப்பித்துக் கொள்கிறேன்
(கீதை - 4.7)

அடக்குவதற்கரிய பல சக்திகளைக் கொண்ட ஹிரண்யாக்ஷனெனும் அஸுரன் பூமிப் பிராட்டியினைக் கவர்ந்து செல்ல, ப்ரஹ்மன் பூமியை மீட்டுத் தர வேண்டி ஸ்ரீமந்நாராயணனின் திருவடி பணிந்தான். எம்பெருமானும் ஸ்வரூப, ரூப, திருக்கல்யாண குணங்களையுடைய வராஹமாகத் தன்னைப் படைப்பித்துக் கொண்டான். தசாவதாரத்தில் முன்றாவதாக அமைந்த எம்பெருமானின் வராஹாவதாரம் தன்னுள் கொண்டுள்ள பற்பல ஸ்வாரஸ்யங்களின் தொகுப்பாக அமைகிறது இந்த வராஹன் நூறு விஷயம்.

1. வராஹப் பெருமான் **ஜ்ஞானப்பிரான்** என்று கொண்டாடப்படுகிறார். ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில் கொண்டான்... ஞானத்தினொளியுருவை... (பெரிய திருமொழி 2-6-3).

2. **வராஹ: -** எல்லை இல்லாதவற்றுக்கெல்லாம் எல்லையாய் இருந்து அனைத்தையும் சூழ்ந்து வ்யாபித்திருப்பது என்பது இந்தப் பதத்தின் பொருள்.

3. பூமிப்பிராட்டியை யாராலும் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஒளித்து வைக்க எண்ணிய ஹிரண்யாக்ஷன், குணத்தினாலும் கர்மானுகுணமாகவும் க்ஷீணித்தவர்கள் வசிக்கும் கீழ் லோகத்தின் அடி ஆழமானதும், மாசடைந்து இருள் (கனாந்தகாரம்) சூழ்ந்திருப்பதுமான எல்லையிலாப் பெருவெளியினைத் தேர்ந்தெடுத்தான். சேறும் சகதியும் நிறைந்ததான இடந்தனில் பூமிப் பிராட்டி மறைத்து வைக்கப்பட்டிருப்பதை அறிந்ததனாலேயே ஸர்வஜ்ஞனான எம்பெருமான் வராஹ ரூபம் கொண்டான். இதனால் தான் பூமிப் பிராட்டியின் அம்சமாகும் நாச்சியாரும் பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்கு பண்டொருநாள் **மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்** (நாச்சியார் திருமொழி 11-8) என்று தத்ரூபமாக ஸாதித்தாள்.

4. பூமிப்பிராட்டியை மீட்கும் போதில் ஸப்த ஸமுத்ரங்களின் ஆழமானது வராஹப் பிரானின் முழங்கால் அளவிற்குக் கூட இல்லை. அவரது கர்ஜனையானது ஜனலோகம், தபோலோகம், ஸத்யலோகம் ஆகியவற்றில் கம்பீரமாக ஒலித்தது. தனது தந்தங்களின் நடுவே அவர் பூமியினை உயர்த்திப் பிடித்த போதில் அவரது மூச்சுக் காற்றின் வேகத்தினால் அவர்தன் வேர்வையானது ஜனலோகத்தில் தெளித்தது **(விஷ்ணு புராணம்).**




**வராஹப்பிரானின் ரூபம்**

5 மற்றெந்த அவதாரங்களையும் விட ப்ரஹ்மாண்டமானது வராஹப் பிரானின் திவ்ய ரூபம். வராஹனின் திருவுருவம் ஆறாயிரம் யோஜனை நீளமும் மூவாயிரம் யோஜனை அகலமும் உடையது.

6. பூமிப்பந்தானது அவரது இடது கோரைப் பல்லின் மேல் இருந்தது - **கோலவராகமொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட...** (திருவாய்மொழி 10-10-7)

7. ஆதி வராஹன், யஜ்ஞ வராஹன், ப்ரளய வராஹன் என்று பல ரூபங்களில் உள்ளார்.

8. இவற்றுள் யஜ்ஞ வராஹ ஸ்வாமியின் திவ்யாங்க லக்ஷணங்களாவன:

- வராஹனே வேள்விச் சாலை
- உபநிஷத்துக்கள் அவனது பீடம்

- சரீரம் யாஜ்ஞிகர் க்ருஹம்
- சிரஸ் ப்ரஹ்மம்
- ரோமங்கள் தர்பைப் புற்கள்
- திருமுகத்தில் அக்னி
- திருநேத்ரங்கள் ஸூர்யன், சந்த்ரன்
- செவிகள் தர்மங்கள்
- காதணிகள் வேத சாகைகள்
- நாக்கு யஜ்ஞாக்னி
- குரல் ஒலி ஸாமகானம்
- தந்தம் ஸ்ருக் (யாக உபகரணம்)
- பிடரி மயிர்கள் ஸூக்தங்கள்
- ஹ்ருதயம் வேதத்தின் ஆஸனம்
- ப்ராணன் யஜ்ஞ ஹவிஸ்ஸுகள்
- மூட்டுக்கள் யாகம்
- திருவடிகள் சதுர்வேதங்கள்
- குருதி சோம பானம்

9. பிராட்டியானவள் வராஹப் பிரானின் மடிமேல் அமர்ந்து கொண்டு ஆச்ரிதர் உய்வதற்கென ஐம்பதிற்கும் மேற்பட்ட கேள்விகளைக் கேட்டுப் பற்பல ரஹஸ்யங்களை வெளிக் கொணர்ந்தாள். உதாஹரணமாக, ஸந்த்யாவந்தனம் பண்ணும் அனைவருக்கும் ஒரே மாதிரியான பலன் உண்டா?

**ஆச்ரிதர் உய்ய வராஹபுராணம் அநுக்ரஹித்தவை சில**

10. இருபதிற்கும் மேற்பட்ட ஸ்துதிகள் / வ்ருத்தாந்தங்கள்.
11. தானங்கள் 12 வகை.
12. நான்கு கீதைகள்.
13. கர்மபத்தர்கள் செய்யும் செயல்களில் சிறந்தவை எவையெவையென்ற விவரணம்.
14. பர்த்தா பார்யையின் உறவு, கடமை மற்றும் எம்பெருமானை அடையும் வழிமுறைகள்.
15. எந்தெந்த புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சித்தால் என்னென்ன பலன்.
16. எப்படிப்பட்டவர்கள் கருக்குழியை (புநர் ஜந்மம்) அடையாது எம்பெருமானைப் பெறுவர் என்பது.
17. எவரெவர் கெட்ட யோனியில் ஜநிக்க மாட்டார்கள் என்பது.
18. சந்தனம், புஷ்பம், மஞ்சள் ஆகியவற்றைக் கொண்டு எந்தெந்த மாத த்வாதசி தினங்களில் எப்படி பூஜிக்க வேண்டும்.
19. பல்வகைப்பட்ட ஸ்தலங்கள், அவற்றின் விசேஷம், அங்கு அநுஷ்டிக்க வேண்டிய க்ரியைகள், அவை அருளும் பலன்கள்.
20. பித்ரு கைங்கர்யங்களின் வகைகளும் அவற்றில் உயர்ந்தவை எவையென்ற விவரணம்.
21. ஸந்துஷ்டி எது அஸந்துஷ்டி எது?
22. எந்தெந்த உணவு வகைகளை உண்டு எவ்விதமாக பூஜித்தால் எத்தகைய நிலைமை யினை அடைவர்.

**வராஹப்பிரான் பூமிப்பிராட்டியிடம் கூறிய அபசாரங்களில் சில**

23. பிறரது அன்னத்தை உண்டபின் எம்பெருமானை ஸேவித்தல்.
24. ஆண்-பெண் சேர்க்கைக்குப் பின்னர் எம்பெருமானை பூஜித்தல்.
25. ரஜஸ்வலையை பார்த்த பின்னர் எம்பெருமானை தர்சித்தல்.
26. சவத்தைத் தீண்டிய பின் ஸுத்தி செய்யாமல் எம்பெருமானை ஸேவித்தல்.
27. எம்பெருமானுக்கு ஸேவை செய்யுங்கால் மல, ஜல நிவாரணம் பண்ணுதல்.
28. நீல வண்ண ஆடையினை தரித்து எம்பெருமானுக்குக் கைங்கர்யங்கள் செய்வது.
29. அர்ச்சனையின் போது பேசிக் கொண்டே இருத்தல்.
30. தேஹ ஸுத்தி இல்லாமல் எம்பெருமானுக்குக் கைங்கர்யங்கள் பண்ணுவது.
31. சினத்துடன் எம்பெருமானுக்குக் கைங்கர்யங்கள் புரிவது.
32. தவிர்க்கப்பட வேண்டிய வஸ்துக்களை எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பது.
33. குங்குமப்பூவினால் வண்ணமேற்றப்பட்ட வஸ்த்ரங்களை அணிந்து எம்பெருமானுக்குக் கைங்கர்யங்கள் பண்ணுவது.
34. இருட்டில் எம்பெருமானைத் தொடுவது.
35. கருப்பு நிற வஸ்த்ரங்களை அணிந்து கொண்டு எம்பெருமானுக்கு ஸேவை புரிவது.
36. விழுப்பு வஸ்த்ரங்களை உடுத்தி எம்பெருமானை வழிபடுதல்.
37. பூஜைக்கு நடுவே உண்ணுதல்.
38. மாம்ஸாதிகளை புஜித்த பின்னர் எம்பெருமானுக்குப் பூஜை புனஸ்காராதிகள் செய்வது.
39. தீபங்களைத் தொட்டு விட்டு எம்பெருமானின் பூஜையில் கலந்து கொள்ளுதல்.
40. மற்றவர் வஸ்த்ரங்களை அணிந்து கொண்டு எம்பெருமானை ஸேவித்தல்.

41. எம்பெருமானுக்கோ பித்ருக்களுக்கோ ஸமர்ப்பிக்காத உணவை உண்ணுதல்.
42. நீர் நிலைகளில் தீர்த்தமாடப் போகுங்கால் பாதரக்ஷை அணியாமல் செல்வது.
43. வேறு உடலைத் துன்புறுத்தி விட்டு எம்பெருமானிடம் செல்லுதல்.
44. உணவு செரிக்காத நிலையில் எம்பெருமானை ஸேவிக்க வருவது.
45. புஷ்பம் ஸமர்ப்பிக்காது தூபம் ஸமர்ப்பித்தல்.
46. மேளதாளங்கள் முழங்காது எம்பெருமானின் சந்நிதிக் கதவுகளைத் திறப்பது.

**மாயைகள் சில**

47. வாருணீ மாயை, ஐந்த்ரீ மாயை, ராஜ மாயை, அம்சுமயீ மாயை, ஸம்வர்த்தகீ மாயை, அநந்த மாயை, வராஹ மாயை, வைஷ்ணவீ மாயை, பித்ருமயீ மாயை என்று எம்பெருமானது மாயைகள் பல வகைப்படும்.

உலகின் மாயைகளென வராஹ நாயினார் நாற்பதிற்கும் மேற்பட்ட விஷயங்களைப் பற்றி பிராட்டியிடம் கூறியவற்றுள் சில.

48. பனிக்காலத்தில் நீர் சூடாகவும் கோடையில் குளிர்ந்தும் இருப்பது.
49. மாலையில் மேற்கில் மறையும் ஸூர்யன் காலையில் கிழக்கில் உதிப்பது.
50. ஸமுத்ரத்திலிருந்து உறிஞ்சப்படும் உப்பு ஜலமானது வர்ஷமாகப் பொழிகையில் நல்ல நீராவது.
51. ஒரே ஔஷதம் சிலரைக் குணப்படுத்துகிறது சிலரை குணப்படுத்தாதிருப்பது.
52. எம்பெருமானே கருடனாகி தன்னைத் தானே சுமப்பதை அறியாது கருடன் எம்பெருமானை சுமப்பதாய் நினைப்பது.
53. சந்த்ரன் ஒரு பக்ஷம் வளர்வதும் ஒரு பக்ஷம் தேய்வதும் கடைசி நாள் இல்லாது போவதும்.

**தீர்த்தங்கள் சில**

பதினைந்திற்கும் மேற்பட்ட தீர்த்தங்கள், அவற்றில் ஸ்நானம் செய்வதனால் கிடைக்கும் பலன்களாக கூறப்பட்டவற்றில் சில:

54. **அமர தீர்த்தம் –** ஸ்வர்க வாஸம் / செல்வந்தன் வீட்டில் ஜநநம்.
55. **கரவீர தீர்த்தம் -** இஷ்டப்பட்ட இடத்திற்கு தைவீக விமானத்தில் செல்லும் வரம் / த்ரிமூர்த்தி தர்சனம்.
56. **புண்டரீக தீர்த்தம் -** புண்டரீக யாகம் செய்ததின் பலன் / பழைய ஜ்ஞாபகங்கள் கிட்டுவது.
57. **வருண தீர்த்தம் -** எட்டாயிரம் ஆண்டுகள் வருண லோக வாஸம் / எங்கும் செல்லும் வல்லமை.

**பண்ண வேண்டியவையும் பண்ணக் கூடாதவையும் (சில)**

58. பாகவதனைக் கண்டதும் எழுந்து நிற்காதவன் பகவதபசாரப்படுகிறான்.
59. கந்யகாதானத்திற்குப் பின் செய்ய வேண்டிய கர்த்தவ்யங்களைப் பண்ணாதவன் எட்டு தலைமுறை பித்ருக்களைக் கஷ்டப்படுத்து கிறான்.
60. ஸாதுவான மனைவியைத் துன்புறுத்துபவன் கடைக்குலத்தில் துஷ்டனாக ஜநிப்பான்.
61. ப்ராஹ்மணனையும் பசுவையும் வதைப் பவனோடு ஸஹவாசம் கொள்ளலாகாது.
62. அர்ச்சனைக்குப் பயன்படும் மரங்களை வெட்டக் கூடாது.
63. ஆஹார நியமம் அவச்யம்.
64. குறை காண்பவனாகவோ, துன்புறுத்துப வனாகவோ, களவாடுபவனாகவோ, வம்பு பேசுபவனாகவோ இருத்தலாகாது.
65. அதிதி வருங்கால் எழுந்து சென்று வரவேற்க வேண்டும்.
66. செல்வந்தனைப் பார்த்து பொருமுவதோ வறியவனைக் கண்டு ஆனந்திப்பதோ கூடாது.
67. குரு பத்னி, ராஜ பத்னி, ப்ராஹ்மண பத்னியுடன் கூட நினைப்பதே பாவம்.
68. ப்ராஹ்மணன் பகவதாராதன தீக்ஷையினையும் த்ரைவர்ணிகர்கள் விஷ்ணு பூஜந தீக்ஷையினையும் அவற்றிற்கான க்ஷரத்துகளுக்கு உட்பட்டே பெற வேண்டும்.

**வராஹப்பிரானின் மற்ற உபதேசங்கள் சில**

69. பதினான்கு வகையான உபசாரங்களை ஸமர்ப்பிக்கும் முறை.
70. ஸந்த்யாவந்தநாதிகள் செய்யும் வழிவகைகள்.
71. தபஸ்களிலெல்லாம் உயர்ந்த தபஸ் மந்த்ரத்தினால் உபாஸிப்பது.
72. தீபம் ஸமர்ப்பிக்கும் முறை.
73. பக்திபூர்வமாகத் திருவலங்காரம் பண்ணும் முறை.
74. கைங்கர்யங்கள் பண்ண அர்ஹதை இல்லாமை.

**சில பாபங்களும் வராஹப்பிரான் அருளிய ப்ராயச்சித்தங்களும்**

முப்பதிற்கும் மேற்பட்ட பாபங்களையும் அவற்றிற்கான ப்ராயச்சித்தங்களையும் பிராட்டியிடம் தெரிவிக்கிறார் ஜ்ஞானப்பிரான்.

75. **பாபம்** – விழுப்பு வஸ்த்ரங்களோடு பூஜித்தால் யானையாகவும், ஒட்டகமாகவும்,

ஓநாயாகவும், நரியாகவும், குதிரையாகவும், கலைமானாகவும், மானாகவும் தலா

ஒரு ஜன்மம் கொண்டு பின்னர் பக்திமானாகப் பிறப்பான்.

**ப்ராயச்சித்தம் -** தான்யம், புண்ணாக்கு, இலைகள், பால், பால் சாதம், காற்று

ஆகியவற்றை தலா மூன்று நாட்கள் உண்டு வாழ்தல்.

76. **பாபம் -** பற்களைத் துலக்காமல் கர்மாநுஷ்டானங்கள் செய்தால் முன்பு செய்த அனைத்து புண்யங்களும் வீணாகும்.

**ப்ராயச்சித்தம் -** ஏழு நாட்கள் வானத்தைப் பார்த்தவாறு படுத்து உறங்குவது.

77. **பாபம் -** பழையதை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்தால் யாராலும் மதிக்கப்பட மாட்டார்கள்.

**ப்ராயச்சித்தம் -** மூன்று நாள் உபவாசம், 1 நாள் திறந்த வெளியில் உறக்கம், அடுத்த நாள் பஞ்ச கவ்ய ஸ்வீகரணம்.

78. **பாபம் -** மது அருந்தி விட்டு எம்பெருமானை பூஜித்தால் பத்தாயிரம் ஆண்டுகள் ஏழ்மையில் துன்புறுவான்

**ப்ராயச்சித்தம் -** ஸுராபானம் அருந்துதல் கூடாது என்பதை அறிந்தே அதனைப் பருகும் என் பக்தனுக்கு ப்ராயச்சித்தமே கிடையாது.

79. **பாபம் -** செந்நிற ஆடை அணிந்து எம்பெருமானைப் பூஜித்தல் ஸூதக த்ரவத்திற்கு சமமானது என்பதனால் 15 ஆண்டுகள் அந்தத் த்ரவமாகவே உருவெடுப்பான்

**ப்ராயச்சித்தம் -** 17 நாட்கள் ஒரு வேளை உணடு, 3 நாட்கள் காற்றை உண்டு, ஒரு நாள் நீர் மட்டுமே பருகி வாழ வேண்டும்.

**த்வாதசி வ்ரதங்களும் அவற்றின் பலன்களும்**

80. தை - கூர்ம த்வாதசி வ்ரதம் - பாபங்கள் தொலைந்து ஸம்ஸாரத்திலிருக்கும் ஆபத்துகள் அனைத்திலிருந்தும் விடுவிக்கும்.

81. மாசி - வராஹ த்வாதசி வ்ரதம் - அஸுபங்கள் நீங்கும். புத்ர ப்ராப்தி உண்டாகும். வறியவனும் தனிகனாவான்.

82. பங்குனி - நரசிம்ஹத்வாதசி வ்ரதம் - இழந்த செல்வங்கள், நிம்மதி, ஆரோக்யம் ஆகியவற்றை அருள்வதோடு பெறற்கரிய சக்திகளையும் அநுக்ரஹிக்கும்.

83. சித்திரை - வாமன த்வாதசி வ்ரதம் - கேட்டதைக் கேட்ட வண்ணம் கொடுக்கும்.

84. வைகாசி - ஜாமதக்ன்ய த்வாதசி வ்ரதம் - உலக ப்ரஸித்தி பெறும் சந்ததிகள், ஜ்ஞானம், ஸுபிக்ஷம். புகழ், எல்லையற்ற செல்வம் என்று அனைத்தையும் நல்கும்.

85. ஆனி - ராம த்வாதசி வ்ரதம் - மன்னனாகப் பிறந்து ஜன்மம் முடிந்த பின்னர் இந்திரலோகம் ஆள்வான்.

86. ஆடி - க்ருஷ்ண த்வாதசி வ்ரதம் - முறையாக அநுஷ்டிப்போர்க்கு எம்பெருமானே மகவாகிறான் (உதாஹரணம் வஸுதேவர்-தேவகி).

87. ஆவணி - புத்த த்வாதசி வ்ரதம் - சத்ருக்களை ஸம்ஹரித்து பேராபத்துகளிலிருந்து காக்கும்.

88. புரட்டாசி - கல்கி த்வாதசி வ்ரதம் - இழந்த பொன், பொருள், பட்டம், பதவி, புகழ் என்று அனைத்தையும் மீட்டுத் தரும்.

89. ஐப்பசி - பத்மநாப த்வாதசி வ்ரதம் - ஸத்புத்ரர்கள் அமைவார்கள்.

90. கார்த்திகை - தரணி த்வாதசி வ்ரதம் - ஸகல பாப விமோசனம். பெரிய பதவிகள் கிடைக்கும்.

91. மார்கழி - சுப வ்ரதம் - தீர்காயுஸ், புகழ், ஸத்விஷய ஜ்ஞானம், ஸத்ஸம்பந்தம் அனைத்தும் அமையப் பெற்ற வாரிசு அநுக்ரஹமாகும்.

**காம்யார்த்த பலன்களை அருளவல்ல வ்ரதங்கள் சில**

92. ஸௌபாக்ய வ்ரதம் - ஸுபிக்ஷம் பெருகும்.

93. அவிக்ந வ்ரதம் - தடைகள் தகர்ந்து போகும்.

94. காம வ்ரதம் - அபேக்ஷிக்கும் அனைத்து ஸுகங்களும் கிடைக்கும்.

95. ஆரோக்ய வ்ரதம் - பழுதில்லாத ஆரோக்யத்தினை அருளும்.

96. புத்ர ப்ராப்தி வ்ரதம் - ஸந்ததி வ்ருத்தியினை அநுக்ரஹிக்கும்.

97. சௌர்ய வ்ரதம் - பயந்த ஸ்வபாவமுள்ளவனையும் வீரனாக மாற்றும்.

98. ஸார்வபௌம வ்ரதம் - நிலையினை உயர்த்தும் (உதாஹரணமாக மன்னனை சக்ரவர்த்தியாக்கும்).

99. வஸந்தகால த்வாதசி வ்ரதம் - நல்ல கணவனை அருளும்.

100. ராஹு தோஷம் உடையோர் வராஹ மூர்த்தியை ஆராதிக்க வேண்டுமென்று மத்ஸ்ய புராணத்தில் தாம்ரபரணி மஹாத்ம்யம் கூறுகிறது.

ஸ்ரீ:

# தகுந்ததும் தகாததும்

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

*மக்களே போல்வர் கயவர் அவரன்ன*
*ஒப்பாரி யாம் கண்டதில்.*
(திருக்குறள் - 1071)

கயவர்களின் (தீயோர் / துர்ஜனங்கள் / துஷ்டர்கள்) வெளித்தோற்றத்தில்

நல்ல மனிதர்களைப் போல் இருப்பார்கள். நன் மக்களுக்கும்

கயவர்களுக்கும் இடையே உள்ள அத்தகைய உருவ ஒற்றுமையை வேறு எங்குமே நாம் காண முடியாது. ஆனால் அவர்களை அறிந்து விலக்க வேண்டும் (விலகி இருக்க வேண்டும்). அவர்களுடன் சேரக் கூடாது.

*நிக்ரந்தோ ஜகத் ப்ராணாந் உத்கிரந்தோ விஷம் முகை:।*
*தூராத: பரிஹர்தவ்யா த்விஜிஹ்வா ஜிம்ஹவ்ருத்தய:॥*
(ஸுபாஷித நீவி - ஸ்வாமி ஸ்ரீ தேசிகன்)

துர்ஜனங்களுடைய ஸஹவாஸம் இம்மைக்கும், மறுமைக்கும் மிகவும் இழிவுபடுத்தும். இந்த ச்லோகத்தில் எந்த விதமான ப்ரகாரத்தாலும், பாம்பு போல் துஷ்டர்களுடைய சேர்க்கை கூடவே கூடாது என்பது திரண்ட பொருள்.

*யத்ருதவ்யா உபதாய ப்ராணப்ருத உபததாதி ।*
*தஸ்மாத் ஸர்வாந் ருதூந் அனுவாயுராவீவர்த்தி ॥*
(தை. ஸம். 5-3-1).

*ஸமாஸ்த் வாக்நரு தவோவர்த்தயங் வித்யா*
*ஹஸமாபிரே வாக்நிம் வர்தயதி।*
(தை. ஸம். 5-1-8).

**ப்ராணம் மேபாஹீதி பஞ்ச ப்ராணப்ருத ருதவ்யா அநூபதாய** என்று கல்ப ஸூத்ரத்தில் சொல்லப் பட்டுள்ளது.

**ஜகத் ப்ராணாந்** என்பதற்கு வேதம் சொல்லுகிறது. சயன ப்ரகரணத்தில் பலவிதமான செங்கல் கற்களை அமைப்பதுண்டு. அதில் ருதவ்யா என்கிற செங்கல் ஒருவகை. அது அக்நிக்கு ப்ராணனாக இருக்கக்கூடியது. **ப்ராணப்ருத உபததாதி ருதுஷ்வேவ ப்ராணாந்ததாதி** என்கிறது வேதம். அல்லது ப்ராண சப்தம் வாயுவைச் சொல்லும். **ஏஷவை வாயு: யத் ப்ராண: அர்த்தா: பஹிச்சரா: ப்ராணா:** என்றும், **ப்ராணோப்ரம்ம** என்றும், ப்ராணஸ்தானத்தில் த்வனி, ரஸம் என்றும் பஞ்சவ்ருத்தி ப்ராணதுல்யம் என்றும், விஷமந்த்ரமாகச் சொல்லுகிற வேதம், **யத்யபிசரேதமும் ஜஹ்யதத்வா ஹோஷ்யாமீதிப்ரூயாத் ஆஹுதிமேவை நம்ப்ரேப் ஸந்ஹந்தியதி தூரேஸ்யாத் ஆதமிதோஸ்திஷ்டேத் ப்ராணமே வாஸ்யாநு கதய்ஹந்தி யத்யபிசரேத் அமுஷ்யத்வா ப்ராணேஸாதயா மீதிஸாதயேத் அஸந்நோவை ப்ராண: ப்ராணமேவாஸ்யஸாதயதி** (தை. ஸம். 6-4-5).

**விஷம்**

*தக்ஷகஸ்ய விஷம் தந்தேமக்ஷிகாயா: சிரோவிஷம் ।*
*வ்ருசச்சிகஸ்ய விஷம்புச்சே ஸர்வாங்கே துர்ஜநேவிஷம்॥*

த்விஜிஹ்வா: என்பதாலே, த்வயஜிஹ்வா: சரணாகதா: - த்வய மந்த்ர உச்சாரணம் செய்பவர்கள் த்விஜிஹ்வா: - சரணாகதி மந்த்ரத்தை இரண்டாகப் பிரித்துச் சொல்லலாம். அல்லது **ஸக்ருதுச்சாரந் ஸம்ஸார தாரகோபவதி** என்கிறபடி ஒருதடவை அல்லது **ஸகலம் கால த்வயே நஸ்திதம்** என்றபடி எப்பொழுதும் கீர்த்தனம் செய்வது. அல்லது **ஸததம்யஸ்ய ஜிஹ்வாயாம் ஹரிரித்யக்ஷரத்வயம்** என்கிற வசநபலத்தால் த்விசப்தத்தாலே இரண்டு அக்ஷரத்தையுடையது நாக்கு என்கிறபடி. யாகத்தில் ஸோம ரஸங்களை பாத்ரத்தில் வைப்பார்கள். ருதுக்ரஹமாகவும் சொல்லலாம்.

**யத்ருதுக்ரஹாக்ருஹ்யந்தே ஸுவர்கஸ்ய லோகஸ்ய ப்ரஜ்ஞாத்யை** என்றது வேதம் (தை. ஸம். 6-5-3).

**ஷட்க்ருத்வ ஆஹ ஷஷ்ட்வா ருதவ ருதூநேவ ப்ரீணாதி** என்பது ச்ருதி (தை. ஸம். 6-5-3).

ஸோமலதையினுடைய கதை கத்ருப்ராமணத்தால் ப்ரஸித்தம்.

**அநீதாம் து நிஜாக்ஷரை:** என்றார் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யத்தில் (ச்லோகம் - 2).

ஐந்த்ரவாயவ என்கிற முதலான க்ரஹம். அதாவது மர பாத்ரம். அவற்றில் ருதுக்ரஹங்கள் சில அவைரிதவ்யங்கள். அதில் மந்த்ரம் சொல்லி ஸோம ரஸத்தை வைப்பதுண்டு. ஆரம்பத்திலும், கடைசியிலும் இரண்டு இரண்டாகப் பாத்ரமாகச் சேர்த்து க்ரஹிப்பதால் த்விஜிஹ்வங்கள். **ஸஹ ப்ரதமௌக்ருஹ்யேதே ஸஹோத்தமௌ தஸ்மாத்த்வௌத் வாவ்ருதூ உபயதோமுகம் ருதுபாத்ரம் பவதி க:** (தை. ஸம். 6-5-3) என்கிறது வேதம். மந்த்ரங்கள் ஆறு தடவை, நாலு தடவை, இரண்டு தடவை என்று எண்களை மாற்றிச் சொல்லுவதால் ஜிம்ஹ வ்ருத்திகள். **அம்ருதஸ்வரூபத்வாத் ப்ராண ப்ரதன் ஸோமரஸம் ஜகத்ப்ராணாந்** - ஸோமரஸமே ப்ராணம். அதை பாத்ரம் கொள்வதால் நிகிரந்த: என்றது. உத்கிரந்த: அவிஷம் என்று பதம் பிரிவு. **அவிஷம் ந: பிதும்க்ருணு** என்று வேதம் சொல்லிற்று. (தை. ப்ரா. 3-3-9) இந்த மந்த்ரத்தில் **ந: பிதும் அந்நம் அவிஷம்க்ருணு.** அம்ருதம் குரு என்று பாஷ்யம். அவிஷமாவது

அம்ருதம் ஸோமரஸமே. அதை ஹோம காலத்தில் விடுவதால் உத்கிரந்த: என்றதாம். இவைகளும் யார் அனுஷ்டிக்கிறார் இக்காலத்தில் என்ற படி.

அச்வினீதேவதைகள் இரண்டு நாக்கை உடையவர்கள். அவர்கள் இரண்டு நாக்குகளாலே ஸோம ரஸத்தைச் சாப்பிடுபவர்கள். ஸோம ரஸமே ப்ராணன். **யா வாம் கசா மதுமதீ அச்விநா ஸூந்ருதாவதீ, தயா யஜ்ஞம் மிமக்ஷதம்** என்கிறது வேதம் (தை. ஸம். 1-4). **மதுஸ்சமாதவஸ்ச** என்று ஆரம்பித்து, **தபச்சதபஸ்யச்ச** என்கிறவரை இரண்டு இரண்டு மாஸங்களாக ருதுவைச் சொல்லுகிறது (1-4-15). இதுகள் த்விஜிஹ்வா: ஆகாரமென்கிற ஹோமத்தையும் சொல்லலாம். ருஜுமாகாரயதி, **ருஜுரிவஹிப்ராண: ஸந்தத மாகாரயதி... ப்ராணமேவாஸ்மாத் ஜிம்மம் நயதி தாஜக்ப்ரமீயதே** என்கிறது வேதம் (தை. ஸம். 2-5-11). யஜமானன் மரணத்தை அடைய வேண்டும் என்று அத்வர்யு ஹோமம் செய்வான். இதில் ஈசான திக்கிலும் ஆக்நேய திக்கிலும் இருக்கிற ஜ்வாலைகள் இரண்டு. இது சூன்யம் வைப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடியது. ஆகையால் ஆகார ஹோமம் அபிசார யாகமாக செய்யும்பொழுது த்விஜிஹ்வம் என்றாகிறது. **பூர்வதிக் ஸர்வகாமேஷு ஆக்நேயீ சாந்தி கர்மஸு ஐசாநீசோக்ர கார்யஷு ஏதத் ஹோமஸ்ய லக்ஷணம்** என்று ஸ்ம்ருதி ரத்னாகரத்திலும் தக்ஷ ஸ்ம்ருதியிலும் கூறப்பட்டுள்ளது.

கருடன் விஷயமாகச் சொல்லலாம். ஸோம ரஸத்தை கருடன் காயத்ரியைச் சொல்லிக் கொண்டு வரும்பொழுது இரண்டு கால்களால் இரு பாகங்களையும், முகத்தால் ஒருபாகத்தையும் எடுத்தாராம். இங்கு இருகால்கள், இரண்டு நாக்கு என்கிறார். **பத்யாந்தேஸவநேஸம க்ருஹ்ணாத், முகேநைகம், யந்முகேந ஸமக்ருஹ்ணாத்** என்கிறது வேதம் தை. ஸம் (6-1-6). **த்விஜிஹ்வாதிபா கல்ப** என்ற கருடதண்டகமும் இங்கு அனுஸந்தேயம்.

ஸோமரஸமே ப்ராணம் முகத்தால் எடுத்ததை சாப்பிட்டு விட்டது. அவிஷமென்று பிரித்தால், அவிஷம் ஸோம ரஸம் (அம்ருதம்). **யம் ஜீவமச்நுவாமஹை ந ஸரிஷ்யாதி பூருஷ:** என்றது வேதம் (தை. ஸம். 4-2-7) என்கிற வசனத்தாலே ஸோம ரஸம் சாப்பிட்டவர்களுக்கு மரண பயம் கிடையாது என்கிறது வேதம்.

ஜிம்மவ்ருத்தி. அப்படிப்பட்ட கருடனை ப்ரதக்ஷிணம் செய்ய வேணும், அதே **பரிஹரணம் பரித: ஹரிணம்** என்ற படி ஆசார்யன் விஷயம் சொல்லப்படுகிறது. **த்விஜிஹ்வாஜிம்ம வ்ருத்தய: என்று செய்தால் அந்தர் ஜிஹ்வா பஹிர் ஜிஹ்வா** என்றபடி. அந்த: பரமாத்மா, பஹி: வாக்வ்யாபாரம். அர்த்த சந்த்ரபாண விஷயமும் உண்டு. அந்த பாணத்திற்கு இரண்டு கூறுகள். அதுவும் த்விஜிஹ்வம் தான் அது ப்ராணனை அபஹரிக்கும் விஷம் இருப்பதால் அதைப் பெருக்கும், வக்ரமாக



சரீரத்தில் புகும். அதை தூரத் தள்ளவேண்டும் என்ற படி.

*அஹோ கலு புஜங்கஸ்ய விசித்ரோண்யம்வத க்ரம:*
*அங்யஸ்ய தசதி ச்ரோத்ரம் அங்யப்ராணை: வியுஜ்யதே।*
*கலாநாம் கண்டகாநாம் ச த்விவிதைவ ப்ரதிக்ரியா*
*உபாநஹா முகே பங்க: தூரதோ வாபி வர்ஜநம் ॥*

**துஷ்டனைக் கண்டால் தூர விலகு** என்கிற பழமொழி உண்டு. அந்தப் பழமொழிக்கேற்ப இந்த ச்லோகம் அமைந்திருக்கிறது.

''வாழ்வாதாரத்திற்கு ப்ராண ஸ்தானத்தில் இருக்கிற செல்வங்களைச் சாப்பிட்டு விடுகின்றனர். அயலாருடைய சொத்துக்களையெல்லாம் கொள்ளையடித்துவிட்டு அவர்களை வாழவிடாமல் நாசம் செய்கின்றனர். பல விதமாக வாயில் வந்தபடி அயலாரை விஷம் போல் கொடிய வார்த்தைகளால் வசை பாடி விரட்டி விடுகின்றனர். இரண்டு நாக்கை உடையவர்கள். ஸமூஹ த்ரோஹிகள். கபட வேஷம் பூண்டு எல்லோரையும் ஏமாற்றி வருபவர்கள். இப்படிப்பட்டவர்களை வெகு தூரத்தில் வைக்க வேண்டும்''.

**த்ருஷ்டாந்தம்**

பாம்பிற்கு வாதாசனன் என்று பெயர். காற்றை ஆஹாரமாக உட்கொள்ளும். அதே வாயால் விஷத்தையும் கக்கும். நேராகப் போகவே போகாது. வளைந்து வளைந்து தான் போகும் இரட்டை நாக்கை உடைய பாம்பு. இதுதான் துஷ்டர்களின் நிலை (நம்முடைய ப்ராணனும் ஒரு காற்று தான்).

இதற்கு மேல் விவரணம் சொல்லப்படுகிறது.

விஷம் முகை: என்பதாலே

*அஹமேகுரு: ஸுதாருணாநாமிதி*
*ஹாலாஹல மாஸ்ம தாத த்ருப்ய: ।*
*நநு ஸந்தி பவாத்ருசாநி பூய:*
*புவநேண் ஸ்மிந் வசநாநி துர்ஜநாநாம் ॥*

துர்ஜனனுடைய லக்ஷணம் என்றபடி.

அவ்வாறே,

*ப்ராகர்ணவஸ்ய ஹ்ருதயே வ்ருஷலக்ஷ்மணண்த ।*
*கண்ட்டேண்துநா வஸஸி வாசி புந: கலாநாம் ॥*

என்று காலகூடம் குறித்து ஒரு கவி சொன்னான்.

ஜிம்மவ்ருத்தய: = ஆஜன்மஸித்தம் கௌடில்யம் கலஸ்யச ஹலஸ்யச - கடபமான வ்யாபாரத்தை உடையவர்கள்.

**ராமோ த்விர் நாபிபாஷதே** என்பது போல இங்கு த்வி சப்தத்திற்கு பரஸ்பர விருத்தார்த்தக வாக்யத்வயம் என்பது பொருள். இது எல்லாவற்றிற்கும் உபலக்ஷணமாக சொல்லப்பட்டது. ஆகையால் புருஷபேதத்தாலே கலஹார்த்தமாக விருத்தமான வார்த்தைகள் ப்ரயோகம் பண்ணப்பட்டது என்பது தாத்பர்யம். இங்கு த்விஜிஹ்வ சப்தத்தாலே.

*கஸ்தூரிகாம்ருகாணாமண்டாத் கந்தகுணகிலமாதாய ।*
*யதி புநரஹம் விதிஸ்யாம் கலஜிஹ்வாயாம்*
*நிவேசயிஷ்யாமி ॥*

என்று ஒரு கவி பாடினான். துஷ்டனுக்கு ஒரு நாக்குதான் இருக்கிறது. எப்படி இரண்டு நாக்குகள் என்று கேட்டால் கலஹம் பண்ணுகிற காலத்தில் இரண்டு நாக்காக மாறுகிறது என்று கூறுகிறான் கவி.

*காவ்ய சாஸ்த்ர விநோதேந காலோ கச்சதி தீமதாம் ।*
*வ்யஸநேந து மூர்க்காணாம் நித்ரயா கலஹேநச ॥*

என்ற படி.

*துர்ஜந: பரிஹர்தவ்ய: த்யாயாண்லங்க்ருதோண்பிஸந் ।*
*மணிநா பூஷித: ஸர்ப்ப: கிமஸௌ ந பயங்கர: ॥*

என்கிற படி துஷ்டர்களுடைய லக்ஷணமானது கூறப்பட்டது.

இங்கு மேலும் ஸர்ப்ப பரமாக பேசலாம்.

ஜகத் ப்ராணாந் - உலகத்திற்கெல்லாம் ப்ராணதாரண ஸாதனமான வாயுவை, நிகிரந்த: - ஆஹாரமாகக் கொண்டது பாம்பு. **ஸமீரமாருத மருஜ்ஜகத்ப்ராண ஸமீரணா:** என்று அமரகோசம் கூறுகிறது. முகை: - ஐந்து தலைப் பாம்பு என்றபடி அதனால் பஹு வசனம் கூறப்பட்டது. **சைஷா பஞ்சமுகீ துஷ்டி: சேஷ ஸ்ருஷ்டிரிவாபரே** என்று மற்றொரு இடத்தில் சொல்லப்பட்டது. விஷம் – விஷத்தை; உத்கிரந்த: - கக்குகின்ற; த்விஜிஹ்வா: - இரட்டை நாக்கையுடையது. ஜிம்மவ்ருத்தயம் **அராளம், வ்ருஜிநம் ஜிம்ஹம்** என்று அமரகோசம் கூறுகிறது. பாம்புகள் வக்ரகதியை உடையது. **தூரத: பரிஹர்தவ்யா: ஸர்பாதிவத் த்வதபராதிஷு தூரயாதா:** என்று சொல்லப்பட்டது. பாம்புகளைப் பார்த்தால் தூர விலகிச் செல்ல வேண்டும். காளியன் பாம்பானது, பசு மனுஷ்யாதிகளின் ப்ராணங்களை சாப்பிடும். விஷத்தாலே கக்கி அவைகளைக் கொல்லும். விஷக் காற்றாலே எல்லாவற்றையும் பயமுறுத்தி தூரமாகப் போக சொல்லும். ஆகையால் தூரவிலக வேண்டும் என்றபடி.

மேலும் இங்கு ச்லிஷ்ட காவ்ய பரமாகவும் பேசலாம்.

ஜகதாம் ப்ராணா: - காவ்யத்திற்கு முக்யமானது த்வனியும், ரஸமும் தான். **த்வநி: காவ்யஸ்ய ஜீவிதம், ரஸ ஏவாத்ர ஜீவிதம்** என்று இரண்டு விதமாக உள்ளது காவ்யம். காவ்ய பத்ததியானது மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. **காவ்யம் த்வநிர்குணீபூத வ்யங்க்யம் சித்ரமிதி த்ரிதா** என்றபடி. அதில் த்வனி, ரஸம், முதலியன உடையவை ப்ரதானம் - உத்தமம்.

த்வனி, ரஸம் இல்லாதவை மத்யமம். கேவல சப்த வைசித்ரயமாத்ர ப்ரதானமான சித்ர காவ்யம் அதமம். அதிலும் சப்த ஸ்லேஷ ப்ரதாநமான ச்லிஷ்ட காவ்யத்திற்கு ஸாமான்யமாக த்வனி, ரஸம் இவைகள் இருக்காது என்பது தெளிவு. ஆகையால் விலக்கத் தக்கவைகள்

முகை: - லோகத்தில் ஜ்ஞானவாந் இசைந்த இந்த உயிரான அம்சத்திற்கு ஆகாமல் சொற்சுவை களால் ஸ்வாரஸ்யமில்லாத பல அர்த்தங்களைக் கூறுகின்றனவும், ஜிம்மவ்ருத்தய: - சொல்ல வேண்டிய அர்த்தத்தை நேராகச் சொல்லாமல் (அலஸமாகச் சொல்லுதல் **ஜிம்மஸ்து குடிலேsலஸே** என்கிறது அமரகோசம்)

ஆலஸ்யம் என்பது (பொருளை) அர்த்தங்களைச் சீக்ரமாக சொல்லாது சுற்றிச் சுற்றித் தெரிவிக்கின்றது மான விளம்பம் என்ற படி. த்விஜிஹ்வா: - ஒரு பதத்திற்கு இரண்டு அர்த்தத்தைச் சொல்வது

தூரத: பரிஹர்தவ்யா: - இப்படிப்பட்ட ச்லிஷ்ட காவ்யங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது விலக்க வேண்டும். த்வனியோ, ரஸமோ முக்யம். அதில்லாத சப்தசித்ரம் பயன்படாது என்ற படி.

மேலும் இங்கு யமதர்மராஜரைப் பற்றி கூறலாம். சரணாகதியையும் சொல்லுகிறது. முதல் பாதியில் யமனைப் பற்றியும் இரண்டாம் பாதியில் ப்ரபத்தியைப் பற்றியும் கூறுகிறது.

*ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததியம: கில தஸ்யகர்ணமூலே ।*
*பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந் ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥*

*கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்க சக்ரபாணே ।*
*பவ சரணமி தீரயந்தி யேவை த்யஜ பட தூரதரேண தாந் அபாபாந் ॥*



எவர்கள் பகவானிடம் சரணாகதி பண்ணுகிறார்களோ, அவர்களை யமனோ, யமபடர்களோ தூரமாகவே நின்று பார்த்து ஓடிவிடுவார்கள் (திறம்பேன்மின் கண்டீர் என்ற மழிசையர்கோனின் நான்முகன் திருவந்தாதி (68) அருளிச்செயலை இவ்விடம் ஸ்மரித்து ப்ரபந்நர்களின் விஶேஷத்தைப் போற்றுக).

**ஜகத் ப்ராணாந் நிக்ரந்தே** என்பதாலே யமலோகாதிகாரர்கள் சொல்லப்படுகின்றனர். கல்ப பேதத்தாலே பேதம் இருக்கிறபடியால் இங்கு பஹு வசனம் (பன்மை). லோகத்தில் எல்லா ப்ராணங்களை எடுக்கின்ற யமலோகாதிகாரிகள், முகை: - தங்கள் முகங்களாலே; விஷம் - ஸ்வபுருஷனைக் குறித்து - தங்கள் வேலையாட்களைக் குறித்துக் கூறா நிற்கின்றனர். உத்கிரந்த: - சொல்லுகிறார்கள் என்ற படி. இங்கு விஷம் என்கிற பதமானது சஷ - இந்த இரண்டும் அபேதத்தைச் சொல்லுகின்றன. ச என்றாலும் ஷ தான்; ஷ என்றாலும் ச தான். ஆகையால் விசம் என்று விபரிணாமத்தை அடைந்தது.

கோஷ: - கோச: என்பது போல! அல்லது ஷகாரந்தமும் ‘விட்’ - சப்தமானது நைகண்டுக ஸம்மதம் தான். அப்படியே தான் விச்வகோசமென்ன, மேதிநீ கோசமென்ன இவை இரண்டுகளிலும் ‘விட்’ சப்தமானது ஷகாரந்த ப்ரகரணத்திலேயும் பரிகரிக்கப்பட்டது.

**விட்வைச்யே ஜநநேஷ்ணணிதி** என்று வைஜயந்தி கோசகாரர் கூறுகிறார். **விட்பும்ஸி மநுஜே வைஸ்யே** என்று மேதினீகாரர் கூறுகிறார். இந்த ப்ரயோகமானது வேதத்திலும் ப்ரஸித்தம், லௌகிகத்திலும் ப்ரஸித்தமாக உள்ளது. **விசாம்பதி ரபவத்வா ஜீநீவாந்** என்றும் (தை. ப்ரா 2-8-5). **யதா ராஜா விசாரதாய ஸமபவத்** (தை. ஸம் 7-5-13) என்றும் வேதத் தில் சொல்லப்பட்டது. லோகத்திலும் ‘யதா ராஜா விசாம்’ என்று ப்ரயோகம் உள்ளது. ஆகையால் விஷம் என்பதாலே ஸ்வபுருஷ சப்தார்த்தமானது விவரணம் பண்ணப்பட்டது. விஷம் என்பது விசம் என்று ஆயிற்று, தன் ஜனத்தை வேலைக்காரன் என்ற படி. உத்தரார்த்தத்தில் இதி என்ற சொல்லை அந்வயம் பண்ண வேண்டும். விசம் = வேலைக்காரனைக் குறித்து இதை உத்கிரந்த: - சொல்லுகிறார்கள் என்ற படி. இது பர்யந்தம் ஸ்வபுருஷம் என்கிற ச்லோகார்த்தம் முகை: என்கிற பதத்தாலே கூறப்பட்டது.

**விட்விசமேவாவகச்சதி** என்றும் **விடச்வத்த:** (தை. ஸம் 3-5-6) என்றும் **விஶோவகந்தோரிதி** என்றும் (தை. ஸம். 2-3-1) இப்படிப் பலவிதமான ப்ரயோகங்கள் க்ருஷ்ண யஜுர் வேதத்தில் உள்ளன. விரிவுக்கு அஞ்சி சிலவற்றை மட்டுமே காட்டியுள்ளோம்.

த்விஜிஹ்வா: என்பதாலே சரணாகதர்கள் சொல்லப் படுகிறார்கள். **ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே**

என்கிற இந்த மந்த்ரம் மந்த்ரகண்ட த்வயம் ஆக சொல்லப்படுகிறது. இது தான் த்விஜிஹ்வா என்பது. இந்த த்வய மந்த்ரத்தின் பொருள் என்னவென்றால்:

1. பக்தி யோகத்தின் ஸ்தானத்தில் நின்று பலன்தரும் படி ப்ரார்த்தித்து, தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தலாகிய ப்ரபத்தியை (சரணாகதியை) ஸ்ரீபகவானுடைய திருவடிகளில் நம்மைச் சேர்க்கின்ற பிராட்டியும்;
2. அவனோடு சேர்ந்திருப்பதில் ஸ்திரமான தன்மையும்;
3. சீர்மையால் பெரியனான ஸ்ரீ பகவானுக்குத் தக்கனவாகிய குணங்களும்;
4. ஆச்ரிதர்கள் த்யானிக்க இலக்கான திருமேனியின் பகுதியான இரண்டு திருவடிகளும்;
5. சேதநர்களால் ப்ரதாநமாய்க் கருதப்படுகின்ற உபாயமான ஸ்ரீமந்நாராயணனும்;
6. உபாயமாகிய ஸ்ரீ பகவானிடம் மஹாவிச்வாஸத்து டன் கூடிய பரந்யாஸமும்;
7. வேறு உபாயத்தில் அதிகாரமற்ற நம்முடைய நிலைமையும்;
8. நாம் அடைகின்ற ப்ரதான பலனாகிய ஸ்ரீமந்நாராயணனும்;
9. சேதநன் கைக்கொள்கின்ற எல்லைகளாகிய பகவத், பாகவத கைங்கர்யம் முதலியவையும்;
10. அஹங்கார, மமகாரம் முதலிய எல்லாக் கலைகளும் நீங்கப் பெறுதலும் – என, இப்படிப் பத்து விதமான அர்த்தங்களையும் இந்த த்வயமந்த்ரத்தில் அனுஸந்திக்க வேண்டும்.

**அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை** (திருவாய்மொழி 6-10-10), **ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் நான்** (திருவாய்மொழி 3-3-1) முதலிய ஸ்ரீ நம்மாழ்வார் பாசுரங்களை த்வயத்தில் கண்டு கொண்டு உள்ளங்குளிர்க. (விரிவுக்கு அஞ்சி இரண்டு பாசுரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன).

ஹரி என்கிற இரண்டு எழுத்தை நாக்கில் உடையவர்கள்.

**ஜிம்மவ்ருத்தய: - ஸர்வம் ஜிம்மம் ம்ருத்யுபதமார்ஜவம் ப்ரம்மண: பதம்** என்று மஹாபாரதத்தில் சொல்லியபடி ஜிம்மவ்ருத்திகளான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ம்ருத்யுபதம் உண்டு என்று அவர்களுடைய அபிப்ராயம். அவர்களைக் குறித்து ஜிம்மவ்ருத்திகளும் ப்ரபந்நர்கள். அவர்களும் தூரத: பரிஹர்தவ்யா: இதி பதமானது இங்கு அந்வயம் சொல்ல வேண்டும். கோணலான ஒழுங்கற்ற செயல்கள் உடையரேனும் வெகு தூரத்திலேயே விடப்பட வேண்டியவர். அவர்களுக்கு நாம் அதிகாரிகள் இல்லையென்று என்பதாம்.

**த்விஜிஹ்வா:** என்று சொன்னால் வி: – **பக்ஷி பரமாத்மனோ:** என்று பட்ட பாணர் கூறுகிறார். **கமலநயநாதி, சங்க சக்ர கதாபணே** என்று பரமாத்மா சப்த உச்சாரணம் பண்ணுகிறவர்கள் தூரத: பரிஹர்தவ்யா: - தூராத் தூரம் - என்பது போல **தூராதூரமசீசதம்** (தை. ஆ. 2-5) என்று வேதமும் சொல்லுகிறது. ரொம்பவும் தூர விலக வேண்டும் என்று யமலோக அதிகாரிகள் சொல்லுகின்றார்கள்.

மேலும் இங்கு வட்டிக்கு வட்டி என்று சொல்லி யாசகர்களை துன்புறுத்தும் உலோபி விஷயமாகவும் கூறலாம்.

த்விஜிஹ்வா: - கோபவேகத்தாலே ஒரே சப்தத்தை இரண்டு தடவை உச்சரிக்கின்ற லோபிகள் இரண்டு நாக்கை உடையவர்கள்.

**ஜகதாம் ப்ராணாந் நிகிரந்த:** யாசகர்களின் உயிரை வாங்குபவர்கள் லோபிகள் என்ற படி.

*நவீநதீநபாவஸ்ய யாசமாநஸ்ய மாநிந: ।*
*வசோஜீவிதயோராஸீத் புரோ நிஸ்ஸரணே ரண: ॥*

என்ற படி.

விஷம் முகை: - விஷதுல்யமான வார்த்தைகளை; உத்கிரந்த: - கொட்டுகிறவர்கள் (ஏமாற்றுபவர்கள்); ஜிம்ம வ்ருத்தய: - பணத்தை சேகரிக்கும் நோக்காலும், பணத்திமிரினாலும் ஒழுக்கமில்லாமல் பல செயல்களை உடையவர்கள் லோபிகள். தூரத: பரிஹர்தவ்யா: - விட்டு விடவேண்டும்; அவர்கள் வீட்டு வாசற்படி ஸம்பந்தமே கூடாது என்ற படி.

*லுப்தத்வாரக துராரஸிகா பரிபவைஸ்தோஷம் ஜுஷேதாமந: ।*
*தூரீச்வரத்வார பர்ஹிர் விதர்திகா துராஸிகாயை ரசிதோண்யமஞ்ஜலி:॥*

ஜலத்தாலே அவனுக்கு தர்ப்பணம் பண்ணி விட்டு விடவேண்டும் (தத்தஜலாஞ்ஜலி: என்ற படி).

**முடிவுரை**

1. நமது சேர்க்கையே நம்மை வழிநடத்தும்.
2. ஆழ்வார், எம்பெருமானார், தேசிகன் வழிவந்த ஆன்றோர் சேர்க்கை உத்தமம்.
3. பாம்பு போலுள்ள தீயோரைக் காணவே கூடாது.
4. ஒரு சொல்லுக்கு பல பொருட்களைக் கூறலாம்.
5. அறிவால் நன்றுகளையும், தீதுகளையும் பிரிக்க முடியும்.
6. இவ்வாறு பகவான் நமக்கு அளித்த அறிவைப் பயன்படுத்தி, நாம் கொள்ள வேண்டிய வைகளையும் விலக்க வேண்டியவைகளையும் அறிந்து வழிநடப்போம்.

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (40)

## The Divine Lass To Whom Love And Devotion Were Inseparable

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Aadi is a significant month in the Sri Vaishnava calendar as we are to celebrate Thiru AadipPooram, the day Andal manifested in this world to be adopted as the daughter of Vishnu Chiththa, also known as Periyazhwar. For the record, Andal's other well-known names include Godha and Soodi-koduththa Naachchiyaar.

Andal's unique status in our Sampradaya is, in a way, akin to that of Nammazhwar as both don a dual role. If Nammazhwar doubles up as an Acharya, Andal, an incarnation of Bhu Devi, grew up to join and embellish the ranks of Azhwars with her exquisite poesy soaked in love and devotion.

In fact, there doesn't seem even an iota of difference between love and devotion in her quest of achieving the ultimate goal — the Lord Himself. The shades of eroticism discernible in her verses should not be mistaken for mere human desire driven by physical attributes. The fact that she was no ordinary girl but very much an incarnation of a Consort of the Lord Supreme should put the issue in proper perspective.

While the other Azhwars who took to Naayika Bhavam had to draw from the realm of imagination and feign femininity, it was so natural for Andal to lament separation or rejoice union. This makes her outpourings inherently effervescent and delectably candid.

The story of Andal is widely known and hence, in this Note, let me briefly bring forth the outline of the works of this refreshingly expressive divine lass. The lone female Azhwar has composed two Prabandhams of literary brilliance — ThirupPaavai (30) and Naachchiyaar Thirumozhi (143) — for a total of 173 Paasurams.

**ThirupPaavai:**

ThirupPaavai is immensely popular and is recited daily in all the temples. The month of Margazhi has special significance what with its foremost theme being observance of Paavai festival during this month. The others to follow are: awakening girls and urging them to join in the 'Nonbu', awakening Kannan and praising Him and emphasising the doctrine of self-surrender. (Saranaagathi).



The glory of ThirupPaavai is well brought out by VedapPiraan Bhattar, a descendant of the Periyazhwar clan, in the following tribute which begins with "Kodhai Pirandhan Oor":

...பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

"... ThirupPaavai washes away one's sins, shows the way to the Lord and is the seed of all the Vedas. Those who do not know the 30 Paasurams sung by Andal are a burden to this earth."

Normally, we see the seed first and the offshoot later. But in this case, all the philosophical ideas contained in the ageless and legendary Vedas are found compressed in this beautiful little hymn of 30 verses, which is of a relatively recent origin as compared to the Vedas.

**Naachchiyaar Thirumozhi:**

This sweet Prabandham consists of 14 decads whose synopses are as follows:

1. **Thai Oru Thingalum:** In the opening decad, Andal seeks the help of the Love God Manmatha in quest of her union with Sriman Narayana. She avers not to live on if she ever heard that she would be in wedlock with a mortal.
2. **Naamam Aayiram:** This is about little cow-herd girls playing in the sand and it starts with calling out Narayana as one who is praised in a thousand names. Fearing that a young and mischievous Krishna would come and destroy the castle they had built, they plead with him not to do so.
3. **Kozhi Azhaippadhan Munnam:** The begging of embarrassed young girls after Krishna's mischievous act of stealing their clothes while they bathe in a pond is recounted by Andal. The girls praising him and pledging to oblige to his diktats in an effort to get back their clothes and save their honour is beautifully brought out here.
4. **Thelliyaar:** Krishna's anticipated arrival triggers off reading of omens to that effect. The attributes and great deeds of the Lord are sung by the cow-herd girls and Andal recalls them in this decad.
5. **Mannu Perumpugazh:** This is about urging the Koel to reach for the Lord and fetch Him for her sake. Andal cajoles and makes promises to the bird in order to get her wish fulfilled while describing the Lord with various adjectives.
6. **Vaaranamaayiram:** This famous decad depicts her auspicious dream of marrying the Lord as Andal tells her friend the nuptial sequence as it happened in the dream. These are: Decking up of festoons, entering of the groom, her being draped with bridal saree and garland, tying of the talisman-thread, the groom storming into the dais, holding hand-in-hand, circumambulating the fire-altar, stepping on the grinding-stone, feeding fire with puffed-rice and bathing with scented water.
7. **Karuppooram Naarumo:** Here Andal praises the Conch and envies its great fortune of proximity and physical contact with the Lord (as it is blown by Him). In the opening Paasuram she enquires of the Conch whether Lord Madhava's mouth and lips would bear the fragrance of camphor or lotus and whether they are sweet or tasty.
8. **Vinneela Melaappu:** This is all about sending the cloud for a messenger to the Lord of Thiruvenkatam, expressing her loneliness and helplessness. Her woes of separation and longing find ample and fitting outlet in this exquisite decad.
9. **Sindhura-Chempodi:** Andal records here her devotion to her favourite Lord Sundararaja of Thirumaalirun-Cholai. She addresses a friend, Karuvilai and Kaya flowers, koels and peacocks, beetles, lakes and lotuses along the way and tells them about the Lord's deeds and her love. In a highlight of the decad, Andal promises the Lord with the offer of 100 containers of butter and another 100 of sweet-rice, if only He would come and accept them.
10. **Kaarkkodal Pookkaal:** In this decad, Andal addresses various entities such as Kodal flowers, Kaanthal flowers, Kovai creeper, Mullai creeper, singing Koels, dancing peacocks, rain clouds, the vast ocean and expresses her plight of loneliness.
11. **Thaam Ugakkum:** Her deep love for Lord Ranganatha manifests here as she calls Him sweet Lord who has beautiful locks of hair, beautiful lips, beautiful eyes and a beautiful lotus on His navel. She further calls Him the sovereign Lord who reigns the entire universe.
12. **Matru Irundheergatku:** In a bold appeal to the society, Andal submits that she be united with the Lord. She tells people in a tone of disdain: "Your advice to me on my affair with Madhava is like the words of the mute to the deaf (will not have any effect at all)". Not only that, she urges them to take her to where the Lord was.
13. **Kannan Ennum:** Caught in the vortex of despair and acute love-sickness for Krishna, Andal asks that she be quenched with applying things that are dear to the Lord, like His yellow vestment, the cool Thulasi, the Vanamala, the spittle from His sweet mouth, the trickle from the holes of His flute, the mud trodden by Him, etc.
14. **Patti Meyndhu:** And, finally, she finds Him at Vrundhaavan. Two groups of cow-herd girls are engaged in beautiful exchanges — one enquiring whether the other found Krishna and the other replying in the affirmative that they indeed saw Him at Vrundhaavan.

The power of her determination finally prevailed in her real life too as she united with Rangamannaar to signal that the agenda of her incarnation was fulfilled. Hail to Sri Andal!

***(to be continued…)***

ஸ்ரீ:

# Swami Desika – Master of Analogy (4)

## 100 Gems from Srimath Rahasya-thraya Saaram

Smt. Padmalatha Sridharan, Chennai

**Analogical Gems 16 to 20**

16. How those serving in the queen's quarters are treated indulgently by the king (Parikara Vibhaga Adhikaaram):

“அந்தப்புர பரிஜந விஷயத்திற் போலே”

"Swami Desika, while establishing the fact that Prapathi is the means to obtain any end as desired by the Prapanna, lists five objections that might possibly arise and proceeds to rip into shreds every single one. The first one is — How could the Lord bear to tolerate our approach — we the sinners, who commit innumerable sins per second? This indeed seems to be remarkable but there is a simple explanation.

Since we surrender to the Piraatti first, we become the object of Her recommendation (Purushakaaram) to the Lord to forgive our sins. Hence we are treated leniently by the Lord just like the king who has a



soft corner for those working in the queen's quarters and is tolerant towards their misdeeds. Taking it further, even though the Lord is Omniscient, He is said to be ignorant of our sins! Such is the glory of Piraatti's recommendation. How could He refuse to pay heed to Piratti's words? So we can boldly approach Him for surrender even though we are blatantly undeserving of his mercy.

17. How a great emperor is easily satisfied by a small offering (Parikara Vibhaga Adhikaaram):

“அல்ப வ்யாஜத்தாலே வசீகார்யனான ஸுஜந ஸார்வபௌமனைப் போலே”

This analogy pertains to the third objection, that is, how the Lord, who is complete in Himself, without wanting for anything, could be wooed by the simple act of Prapathi? It is true that there is nothing unattainable for Him and hence He does not need any favours from anyone.

But, just like an amiable emperor who is pleased with any small offering from his subjects, the Lord is gratified that we performed the simple act of Prapathi which is the only excuse needed for Him to shower his blessings upon us. Here the emphasis is on the amiability of the emperor since if he were a cruel one, there is no question of him being pleased by humble offerings. Sriman Narayana's quality of Mercy is the only shelter for us which transforms the simple act of Prapathi into a great deed befitting the fruit thereof, namely Moksha.

18. How the king while feeding his son feeds the pet parrot alongside (Parikara Vibhaga Adhikaaram):

“குமாரனோடு ஒக்க திர்யக்கான கிளிக்குப் பாலூட்டும் கணக்கிலே”

The fifth objection is how the Supreme Lord (who is discerning), could grant the wishes of all Prapannas irrespective of their qualifications in terms of birth, knowledge etc.? The answer is poignant. The Lord feels that He is obliging Himself by helping His beloved Prapannas obtain their desire. When the beneficiary is self, where is the question of looking into the antecedents of the seekers? Swami Desika cites the anecdote from Srimath Ramayana, wherein

it is stated that when Sri Rama left Ayodhya for Sri Vaikuntam he took all the living things of Ayodhya with him be they animals, plants or trees!

The analogy here is how the king while feeding his son with sweet, nourishing milk, extends the same privilege to a mere bird, the pet parrot. Similarly, while granting Moksha, Sriman Narayana does not differentiate between a highly qualified, scholarly Brahmin and an ignorant animal as long as they are Prapannas!

19. How a citizen offers his belongings to the king even though everything automatically belongs to the king (Saanga Prapadhana Adhikaaram):

“தன்னுடைய த்ரவ்யத்தை ராஜாவுக்கு உபஹாரமாகக் கொடுப்பாரைப் போலே”

This analogy has to be studied carefully since it could be misleading otherwise. While the citizen need not necessarily feel or realise that what he offers to the king is the king's property itself, the person who is performing prapathi has to mandatorily realise that the soul is the property of the Lord.

Some people were of the view that Sri Alavandhaar regretted his Prapathi and thus he spake in his Sthotra Rathnam (53) that "when I know I and mine are Yours how and with what can I surrender unto You?"

Swami Desika refutes this surmise strongly and says that the inner meaning of Sri Alavandhaar's sloka is that, if a person proceeds to offer his soul to the Lord without fully understanding its nature and thinking of it as his own, then he is not absolved from the crime of soul-theft. To explain it more clearly, we are all guilty of theft if we think that our soul belongs to us instead of the Lord. If we perform Prapathi with this misconception, it will not be effective. It is like a person offering his land, house etc., to the king, who is actually the real owner of all the property in his kingdom.

So, the point is, a Prapanna should reflect and realise before Prapathi that he is returning the property (the soul) that he had misappropriated, to the rightful owner (the Lord).

20. How piercing an object with an arrow is accomplished in one second by an expert archer (Saanga Prapadhana Adhikaaram):

“அநேக வ்யாபார ஸாத்யமான தாநுஷ்கனுடைய லக்ஷ்ய வேதார்த்தமான பாண மோக்ஷம் க்ஷண க்ருத்யமாகிறாப் போலே”

One may wonder as to how all the components of Prapathi and the actual performance could be deemed to be done in one second as portrayed in the Sasthras.

To clear this doubt, Swami Desika proffers a fitting analogy. Piercing an object with an arrow involves various steps like fixing up the object, determining the point of piercing, testing the bowstring, choosing the arrow, taking aim, etc. But an experienced archer can do it all in a trice, courtesy perfection attained through years of practice. Similarly, the actual Prapathi is completed in a second, while the pre-requisites and the five components (Angas) have been included in the single thought process as encompassed in the three Manthras for performing Prapathi.

***(to be continued…)***


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:



*With Pranams:*

**A Devotee**

**SVDD thanks 'A Devotee'**
for sponsoring this month's issue of Desika Sandesam





**பஞ்சபர்வம், வெள்ளிக்கிழமை, ச்ரவணம் புறப்பாடு**

















ச்ரவண உத்ஸவம்



